கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUN 1958

செய்திகள்

சிகரெட்டும் புற்றுநோயும்

புகை பிடிப்பதனல் புற்றுநோய்க்கு அதிகம் பேர் இரையாகின்றனர் என்று பிரிட்டிஷ் வைத்திய ஆராய்ச்சி நிபுணர்கள் கருதுகிருர்கள். நுரை ஈரலில் புற்று நோயை உண்டாக்கக்கூடிய இரண்டு பொருள்கள் சிகரெட் புகையில் இருக்கிறதாம். சிறுவயதிலேயே சிலர் இந்தத் தீய பழக்கத்துக்கு அடிமையாகிருர்கள். இது நிச்சயம் கெடுதல் என்று ஆராய்ச்சிக் கௌன்சில் தலைவர் கூறுகிருர். எனவே விளையாட்டாகக் கூட இளைஞர்கள் எந்தவிதமான புகையிலைப் பழக்கத்துக்கும் ஆளாகாமல் இருக்கவேண்டும்.

கார்ப்பரேஷன் பள்ளிகள்

சென்னைக் கார்ப்பரேஷன் பள்ளிக்கூடங்களில் இப்பொழுது சொல்லித் தரப்படும் கல்வியைவிட இன்னும் சிறப்பாகக் கல்வி போதிக்க வேண்டும் என்று சென்னை மேயர் கருதுகிருர். இதற்காக 10 டிவிஷன்கள் வீதம் ஒரு நிபுணர்கள் கமிட்டி அமைக்கலாம் என்று ஒரு நல்ல யோசனையை அவர் வெளியிட்டிருக்கிருர்.

ஆங்கிலம் அவசியமா?

நேருஜி சில நாட்களுக்குமுன் ஆங்கிலம் அவசியமா என்ற கேள்விக்குப் பதில் கூறுவதுபோல் ரேடியோவில் பேசினுர். ஆங்கிலத்தைப் புறக்கணிப்பது என்ருல் அந்த மொழியிலுள்ள சிறந்த அறிவுச் செல்வத்தைப் புறக்கணிப்பதாகும் என்பது அவர் கருத்து. உலகம் வேகமாக முன்னேறி வருகிறது. அந்த மாறுதலுக்கு ஏற்ப நாமும் முன்னேற வேண்டுமானுல் ஆங்கில மொழியைப் பயில்வது அவசியம் என்று அவர் கருதுகிருர்.

குழந்தை எழுத்தாளர் சங்கம்

குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் ஏழாவது ஆண்டுப் பேரவை சமீபத்தில் நடைபெற்றது. துன்முகி ஆண்டுக்குப் பின்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தலைவர்: அழ. வள்ளியப்பா; காரியதரிசி: தம்பி ஸ்ரீநிவாஸன்; உதவிக் காரியதரிசி எஸ். வி. ரமணி; பொருளாளர்: நெ. சி. தெய்வசிகாமணி மற்றும் இரண்டு உபதலைவர்கள், ஐந்து அங்கத்தினர்கள் கொண்ட நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

அதிவேகமான கடிகாரம்

உலகிலேயே அதிக வேகமான 'ஸ்டாப் வாட்ச்' அமெரிக்காவிலுள்ள வெஸ்டிங்ஹவுஸ் லாபரேடரியில் தயாரிக்கப்பட்டுள்ளது. விநாடியில் 100 கோடியில் ஒரு பங்கு நேரத்தைக் கணிக்கக்கூடிய கடிகாரமாம் இது. அணு மாறுதல்களைக் கணிக்க இந்தக் கடிகாரம் உதவுமாம்.

செயற்கை மழை

இரண்டு அங்குல ராக்கெட்டுகளைக் கொண்டு மேகத்தின் மீது உப்பைத் தூவி மழை பெய்யும்படி செய்திருக்கிருர்கள். ஆப்பரிக்காவில் நடத்திய இந்தப் பரீட்சை வெற்றிகரமாக இருந்ததாம்.

விசித்திரமான வயிறு

டெஹ்ரான் நகரில் மாயவித்தைக்காரன் ஒருவன் வயிற்றுவலியால் வாடினுன். வைத்தியர்கள் நோயைப் போக்க ஆபரேஷன் செய்து, இரண்டு டஜன் இரும்புக் கிளிப்புகள், ஒரு டஜன் பேனுக்கத்திகள், நான்கு நீண்ட பிளேடுகள், பதிமூன்று கண்ணுடித் துண்டுகள், இரு செருப்பு ஆணிகள், இரண்டு இரும்பு மரைகள் மற்றும் சில சிறிய பொருள்களை வெளியே எடுத்தார்கள். இவைகள் பத்தொன்பது ஆண்டுகளில் வித்தை காட்டும்போது விழுங்கியவைகளாம். இப்போது அவனுடைய எடை பதினுறு பவுண்டு குறைந்துள்ளதாம்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 10

15 - 5 - '56

குழந்தைகளே!	பக்கம்	2
நாகரிகப் பள்ளி	..	3
மஞ்சள் பங்களா	..	5
கூத்தாடும் குரங்குப் பொம்மை	..	9
காக்கையைப் பாடின பெண்	..	10
நன்றி	..	13
பரீட்சை முடிவு	..	16
நண்பன் நாணு	..	21
பாலர் கவி அரங்கம்	..	26
கண்ணன் அங்கத்தினர்கள்		27
சபாஷ், கந்தன்!	..	29
இழந்த பொருள்	..	33
புலிக்குட்டி	..	37
புத்ததேவன் உதித்தான்	..	40

அட்டைப் படம்-
(போட்டோ) N. ராமகிருஷ்ணு
செய்திகள் - 2 - அட்டை.
புத்தர் - 3 - அட்டை.

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-
கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

புதிய
தொடர்கதை!

ஆர்வி

எழுதும்

சைனு சு - சூ!

கண்ணன்

15-6-56

இதழில்

ஆரம்பமாகிறது

குழந்தைகளே!

நீங்கள் மிகவும் ஆசையுடன் இதுவரையில் படித்துவந்த பரிசுத் தொடர்கதை மஞ்சள் பங்களா இந்த இதழில் நிறைவுறுகிறது. தொடர்கதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற இந்தக் கதையும் இரண்டாவது பரிசுபெற்ற ஸி. ஐ. டி. சிங்காரமும் விரைவில் புத்தக உருவில் வெளியாகும். இந்தக் கதைகளை எழுதி, உங்களை மகிழ்வித்த இந்த இரண்டு இளம் எழுத்தாளர்களுக்கும் வாசகர்கள் சார்பில் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்ணன் சித்திரப் போட்டியில் கண்ணன் கழக அங்கத்தினர்களாக இருப்பவர்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம். புதிதாகச் சேருபவர்களும் கலந்து கொள்ளலாம். அங்கத்தினர்களாக இல்லாதவர்கள் சேர முடியாது. புதிதாகச் சேர்ந்தவர்கள் ஆனாலும் பழைய அங்கத்தினர்கள் ஆனாலும் புதிய கூப்பன்களுடன்தான் படங்களை அனுப்பவேண்டும். கூப்பன் இணைக்காத படங்கள் போட்டியில் சேர்க்கப்படமாட்டா.

முதலில் ஒன்று அல்லது இரண்டு கூப்பன்கள் அனுப்பியிருப்பவர்கள் பாக்கிக் கூப்பன்களைப் படத்துடன் இணைத்து அனுப்புங்கள். தனிக் கூப்பனையோ, படத்தையோ புத்தக அஞ்சலில் அனுப்பினால் போதும்.

இன்னும் சில குழந்தைகள் படங்கள் அனுப்ப வேண்டிய விலாசம் சரியாகத் தெரியவில்லையே என்று கேட்டிருக்கிறார்கள். உரையின் தலைப்பில் 'கண்ணன் சித்திரப் போட்டி' என்று எழுதி, கீழே, 'ஆசிரியர், கண்ணன் காரியாலயம், தபால் பெட்டி நம்பர் 604, சென்னை 4' என்று முகவரி எழுதவேண்டும்.

கண்ணனில் அடுத்த தொடர்கதை ஜூன் 15-ஆம் தேதி இதழில் ஆரம்பமாகும். முற்றிலும் புது மாதிரியாக அமைந்த இந்தத் தொடர் கதை பற்றிய விவரங்களை அடுத்த இதழில் வெளியிட இருக்கிறேன்.

கண்ணனில் வெளிவரும் கூப்பனை இந்த இதழுடன் நிறுத்திவைக்க வேண்டியிருக்கிறது. காரணம் ஏராளமான அங்கத்தினர்கள் சேர்ந்திருப்பதுதான். இவர்கள் பெயரெல்லாம் பதிவு செய்துகொண்ட பிறகுதான் மீண்டும் அதை வெளியிடுவது சாத்தியமாக இருக்கும். அதையும் தவிர பதினாறு வயது முடிந்தவர்கள் கண்ணன் அங்கத்தினர்களாகக் கருதப் படமாட்டார்கள். அவர்கள் பெயரை விலக்கி, புதிய அங்கத்தினர்கள் பெயரைச் சேர்த்து, புதிய நம்பர் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் உத்தேசித்தே கூப்பன் வெளியிடுவதை நிறுத்தி வைக்கிறோம்.

ஆனால் அப்படிப் பதினாறு வயது முடிந்தவர்கள் அங்கத்தினராக இல்லாவிட்டாலும், அங்கத்தினர்களுக்குள்ள சலுகை எல்லாம் காட்டப்படும். கண்ணன் தொடர்கதைப் போட்டியில் அவர்கள் கலந்து கொள்ளலாம். பழைய கண்ணன் கழக எண்ணைக் குறிப்பிட்டு, விற்பனைக் கழிவு பெற்றுக்கொள்ளலாம். வெளியூர்கள் போக நேர்ந்தால் அந்த ஊரைப்பற்றி எழுதலாம். புகைப்படங்கள் எடுத்து, கட்டுரையுடன் அனுப்பலாம். உல்லாசப் பிரயாணம் போன இடங்களைப் பற்றி உபயோகமாக எழுதலாம். ஆனால் எதை எழுதினாலும் ரஸமாகவும் விரும்பத்தக்க முறையிலும் எழுத வேண்டும் என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே!

ஆசிரியர்

பாலாற்றங்கரையில்:

நாற்பது வயதான நாகரிகப் பள்ளி

நான் அந்தப் பள்ளிக்கூடத்தைப் பற்றி இதற்கு முன்னால் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்; ஒரு முறை போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்றும் ஆசைதான். ஆனால் சமயம் வரவேண்டாமா?

ஆமாம், வாலாஜாபாத் ஹிந்து மத பாடசாலையைப் பற்றித்தான் சொல்கிறேன்.

சமீபத்தில் அதற்கு ஒரு சந்தர்ப்பம் வந்து சேர்ந்தது. அந்தப் பாடசாலை தோன்றி நாற்பது ஆண்டுகள் ஆகின்றனவாம். அந்த நாற்பதாவது ஆண்டு விழாவின்போது என்னையும் வரவேண்டும் என்று அதை உருவாக்கி வளர்த்த பெரியார் உயர்திரு வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

பிள்ளைகளைப்பற்றியும் அவர்கள் கல்வியைப்பற்றியும் வரவர எங்கே பார்த்தாலும் பேச்சுத்தான் அதிகமாக இருக்கிறது. அதுவும் நமது பாரதத்தின் பிரதம மந்திரி நேரு அவர்கள் குழந்தைகளிடத்திலே அதிகம் ஈடுபாடுள்ளவராக இருக்கிறார், அதைப் பார்த்த பிறகு சிலருக்குத் திடீரென்று குழந்தைகள் மேல் ஓர் அக்கறை ஏற்பட்டுவிட்டது! குழந்தைகளைப் பற்றியே பேசுகிறார்கள்! குழந்தைகள் கூட்டங்களில் கலந்து கொள்வது இப்போது பாஷனாகிவிட்டது. ஆனால் நாற்பது வருஷங்களுக்கு முன்னே நமது நாட்டு ஏழைக் குழந்தைகள் நோயற்ற வாழ்வும் குறையற்ற அறிவுச் செல்வமும் பெற்று விளங்க வேண்டும் என்று அக்கறைப்பட்டவர் ஒருவர் இருந்தார். அவர் அதை ஒரு பாஷனாகக் கருதியிருந்தால் ஊருக்கு ஊர் போய்ப் பேசிவிட்டு, மாலை ஒன்றையும் போட்டுக் கொண்டு பேசாமல் போயிருப்பார். அவரோ வெறும் வாய்ப் பேச்சில் நம்பிக்கையில்லாதவர். குழந்தைகள் தெய்வ பக்தியும் கல்வி ஞானமும் பெறவேண்டும் என்ற ஒரே எண்ணத்தைக் கருத்தில் கொண்டு செயல் படத் தொடங்கினார். நாற்பது ஆண்டுகள் ஒரு ஸ்தாபனத்தைக் குறை எதுவுமின்றி நடத்துவதே ஒரு பெரிய காரியம். அதிலும் நாளுக்கு நாள் அதை மேலும் சிறப்பாக ஓங்கும்படி வளர்ப்பது உண்மையில் பெரிய சாதனைதான். அந்தச் சாதனையைச் செய்து காட்டியவர்தான்





உயர்திரு வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள்.

நாற்பதாம் ஆண்டு விழா மிக மிகச் சிறப்பாக நடைபெற்றது என்பதை நான் சொல்லாமலே நீங்கள் தெரிந்துகொண்டிருக்கலாம்.

ஆனால் நான் இரண்டு விஷயங்களை மட்டும் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அங்கே எண்ணூறு ஏழை மாணவர்களுக்கு மேல் படிக்கிறார்கள். இவ்வளவு பேரில் அறுநூறு பேர்களுக்கு மேல் அங்கேயே தங்கியிருந்து சாப்பிட்டும் வருகிறார்கள்: எல்லாருக்குமே தொழிற் படிப்பு அங்கே கற்றுக் கொடுக்கப்படுகிறது. அலுமினியப் பாத்திரம் செய்வது, பித்தான் செய்வது, கொம்பிலே அழகிய நாரை செய்வது, கம்பளம் நெய்வது, தையல் தைப்பது, மரப் பொம்மைகள் செய்வது, பிளாஸ்டிக் ஸ்லேடுகள் தயாரிப்பது, பூட்ஸ்களுக்கு லேஸ் போடுவது, எம்பிராய்டரி (நூலில் பூ வேலை) பின்னுவது, கைக்குத்தல் அரிசி தயாரிப்பது - முதலியவையெல்லாம் அங்கே கற்றுக் கொடுக்கப் படுகின்றன. அதற்கான சிறு சிறு யந்திரங்களில் மாணவர்கள் வேலை செய்து காட்டுவதை இங்குள்ள படங்களில் காணலாம்.

மாணவர் இல்லத்தை மாணவர்களே அமைச்சர் குழு அமைத்து அழகாக நிர்வாகம் செய்து வருகிறார்கள். தோட்ட வேலை முதல் க்ஷவர வேலை, அச்சு வேலை, சமையல் வேலை, ஜால வேலை முதலிய அத்தனை வேலைகளையும் மாணவர்கள் பழகிக் கொள்கிறார்கள்.

உடற் பயிற்சிக்காக விரதசாரி இயக்க முறைகளும், ஆசனங்களும் பழகுகிறார்கள். ஆடக் கற்றுக்கொள்கிறார்கள்; பாடப் பழகிக்கொள்கிறார்கள்; நாடக நடிப்புக் கலையும் பயிலுகிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் வாழ்க்கைக்கு வேண்டிய நல்ல பண்புகளையும், கைத்தொழிலையும் அங்கே தெய்வ பக்தியோடு கலந்து கற்கிறார்கள் என்று கூறிவிடலாம்.

எட்டாவது வகுப்பு வரையுள்ள இந்தப் பள்ளிக்கு வருஷத்துக்கு எத்தனை செலவாகிறது, தெரியுமா? ஒன்றே கால் லட்சம் ரூபாய் ஆகிறதாம். அதற்கு எத்தனையோ வழிகளில் நாமெல்லாரும் உதவி செய்யலாம். நன்கொடை வழங்கலாம்; அங்கே தயாராகும் பொருள்களை வாங்கலாம்; ஆயுள் இன்ஷியூரன்ஸ் போன்ற திட்டங்களில் சேர்ந்து, அவர்களுக்கு ஒரு லாபம் கிடைக்கும்படி செய்யலாம். அதற்கு எத்தனை செய்தாலும் தகும்; ஏனென்றால் குழந்தைகளுக்கு அறிவும் பண்பும் கலையும் கைத்தொழிலும் நாட்டுப் பற்றும் நல்ல பயிற்சியும் வழங்குகின்ற நாகரிகப் பள்ளியாக அது விளங்குகிறது!

முதல் பரிசுபெற்ற தொடர்கதை:



23

“சந்தானம் இதில் சம்பந்தப்பட வில்லை. அவனுடைய விஷயமே வேறு. இந்தப் பக்கத்தில் சாமுண்டேசுவரி கோவில் என்ற பிரசித்திபெற்ற கோவில் ஒன்று உண்டு. அந்த அம்மன் மகா சக்தி வாய்ந்தது என்று எல்லாரும் சொல்வார்கள். அந்த அம்மன்தான் எவ்வளவு அழகு தெரியுமா? வெறும் கற்சிலையாகவா இருக்கும் அது? அருளும் அழகும் தெய்விகச் சக்தியும் உருவெடுத்து வந்தது போன்ற பிரமை ஏற்படும். 'கலியுக தெய்வம். கண்கண்ட தெய்வம்' என்று எல்லா ஜனங்களும் போற்றினார்கள். யாரோ மகாராஜா அந்த அம்மனுக்கு உயர்ந்த மாணிக்கம் ஒன்று அளித்தான். சில பெரிய மகான்கள் கூடி, சக்கரம் அமைத்து, மந்திரங்கள் ஜபித்து, மகத்தான சக்தியை அதில் உண்டாக்கியிருந்ததாகச் சொல்வார்கள். அந்த மாணிக்கத்தின் சக்தி அளவற்றது என்றும் அது இருக்குமிடத்திலே அஷ்ட ஐசுவரியங்களும் ஏற்படும் என்றும் விஷயம் தெரிந்தவர்கள் ரகசியமாகப் பேசிக்கொள்வார்கள். மிகவும் விசேஷ தினங்களில்தான் அதை வெளியே எடுப்பார்கள். அதை மிகவும் ஜாக்கிரதையாகவே பாதுகாத்து வந்தார்கள்.

“இந்த வட்டாரத்திலேயே சோனிப்பட்டி ஜமீன்தான் மிகவும் பெரியது. அதன் தற்போதைய ஜமீன்தார் சோம்பேறி முத்துத் தேவர் என்பவர் இதை அடைய பெருமுயற்சி செய்தார். நவராத்திரியின்போது இந்த ரத்தினம் அம்மன் கழுத்திலேயே பத்து நாட்களும் இருக்கும். ஒரு நாள் அர்த்த ஜாம பூஜையின்போது இருந்த ரத்தினம், மறுநாள் காலையில் காணப்படவில்லை. அதை எப்படிக் கிளப்பினார்கள் என்பது இன்றும் மர்மமாகவே இருக்கிறது.

“சாம்பசிவம் என்னதான் தவறான காரியங்களில் இறங்கினாலும் சாமுண்டேசுவரியிடம் மட்டும் நல்ல பக்தி உள்ளவர். இந்தச் செய்தி கேட்டதும் அவர் துடித்துப் போனார். எப்படியும் அதைத் திரும்பவும் தேவியிடம் சேர்ப்பது தம் கடமை என்று முடிவு செய்தார்.

சோம்பேறி முத்துத் தேவரின் வேலைதான் இது என்று அறிந்தார் சாம்பசிவம். தமது சாமர்த்தியத்தால் முயன்று அதை அடைந்து விடுவது என்ற முடிவுடன் தேவர் வீட்டை அடைந்தார். அதே சமயம் பக்காத் திருடன் பக்கிரிசாமி, தான்

கொண்டுவந்த ரத்தினத்தை சீசாவில் போட்டு, ஷர்பத் வியாபாரி வேஷத்தில் ஜமீன்தாரிடம் கொண்டுவந்திருந்தான். சாம்பசிவம் இந்த விஷயத்தை ஊகித்துக் கொண்டார். பாம்பின் கால் பாம்புக்குத் தெரியாதா? ஆனால் ஜமீன்தார் தம் திகைப்பைக் காட்டிக் கொள்ளாமல் ஷர்பத் வியாபாரியிடம் பத்து சிவப்புச் சீசாக்களையும் விலைக்கு வாங்கினார். மீதி இருந்த இரண்டு சீசாக்களைத் தமக்கு மிகவும் அவசியம் என்று வற்புறுத்திக் கேட்டு, சாம்பசிவம் வாங்கிக் கொண்டார்.

"ஜமீன்தார் நன்றாகக் கவனித்துதான் சீசாக்களை வாங்கினார். ஆனால் சாம்பசிவத்தின் கண் வீச்சு அதை ஒரே கணத்தில் மாற்றிவிட்டது. பத்திரமாக அவைகளை அலமாரியில் வைத்துப் பூட்டி விட்டுத்தான் உள்ளே போனார் ஜமீன்தார். அசாதாரணமாகப் பத்திரப் படுத்தினால் சாம்பசிவம் சந்தேகப் படுவார் என்றே அவர் அப்படிச் செய்தார். அவர் போன பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்றிருந்தார். ஆனால் அவர் இல்லாதிருந்த ஐந்து நிமிஷத்தில் சாம்பசிவம் காரியத்தை முடித்துக் கொண்டுவிட்டார்.

"சாம்பசிவம் சென்ற பிறகு ஜமீன்தார் சீசாக்களில் மாணிக்கத்தைத் தேடினார். அதுதான் கிடைக்கவில்லை. ஜமீன்தாருக்கு அப்போதுதான் விஷயம் விளங்கிற்று. ஆனால் அன்று சாயந்தரமே சற்றும் எதிர்பாராதபடி சாம்பசிவத்தின் மரணம் நேர்ந்துவிட்டது. வேறு யாரும் வந்து விடுமுன் அதை அடைய வேண்டுமென்று தீர்மானித்து, சந்தானத்தைத் தமது கைக்குள் போட்டுக்கொண்டார் தேவர். பணத்தாசையினாலும் புதிதாக வரும் எஜமானர் தம்மை வைத்துக்கொள்வாரோ, மாட்டாரோ என்ற எண்ணத்தாலும் சீசாக்களிலிருந்து ரத்தினத்தைக் கண்டெடுக்கும் வேலையில் ஈடுபட்டார் சந்தானம். ஷர்பத் சீசாக்களை வாங்கி விற்பதுப் சாம்பசிவத்தின் வியாபாரத்தில் ஒரு பகுதியாக இருந்தபடியாலும் ஜமீன்தார் வீட்டிலிருந்து வந்ததும், சாம்பசிவம் நேரே ஷர்பத் அறைக்குள் போய் விட்டு வெளியே சென்றபடியாலும் அந்த அறையிலேதான் அந்த மாணிக்கம் இருக்கவேண்டும் என்று முடிவு செய்தார் சந்தானம். அதனால்தான் முருகனும் சந்தானமும் அதிலே தேடிக்கொண்டிருந்தார்கள். அதைத் தேடுவதற்கு உங்கள் வருகை இடைஞ்சலாக இருக்கப்போகிறதே என்றுதான் உங்களை எச்சரித்து அந்தக் கடிதத்தையும் அனுப்பினார் அவர். ஆனால் நீங்கள் அதைப் பொருட்படுத்தாமல் உடனே வந்து விட்டீர்கள். வந்ததும் நீங்கள் செய்த காரியங்கள் அவருக்கு இடைஞ்சலாக இருந்தன. ஜமீன்தார் வேறு அவசரப்பட்டார். அதனால் உங்கள் இருவரையும் ஜமீன்தார் வீட்டிலே சிறைப்படுத்திவிட்டு தேடுவது என்று முடிவுசெய்து உன்னையும் அழைத்துப் போனார். ஆனால் திருடர்கள் குறுக்கிட்டதாலும் உன் நண்பர்களுக்கு நீ ஏதோ செய்தி அனுப்புகிறாய் என்று தீர்மானித்ததாலும் இரவுக்கு இரவே தம் கையாட்களை வைத்து முருகனுடன் எல்லாச் சீசாக்களையும் லாரியில் ஏற்றிக் கொண்டு கம்பி நீட்டிவிட்டார். ஆனால் அந்த ரத்தினம் இருக்கும் சீசா சாம்பசிவத்தின் ரகசிய அறையிலே பத்திரமாக வைக்கப்பட்டிருந்தது. நீயும் இப்போதுதான் அதைக்கண்டு பிடித்தாய். என்ன! நான் சொல்வது சரிதானா!" என்றார் ஹநுமந்தராவ்.

ஆச்சரியத்தால் கற்சிலைபோல கேட்டுக்கொண்டு வந்த மனோகரன், "தாத்தா எங்கே இன்ஸ்பெக்டர் ஸார்? அதையும் சொல்லிவிடுங்கள்" என்றான்.

24

"உங்கள் தாத்தா எங்கே என்று சொல்வதற்கு முன்னால் வக்கீலைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். சாம்பசிவத்துக்கு ஆரம்ப காலத்தில் பண உதவியும் பின்னால் அவர் காரியங்களில் சட்டப்படி அகப்பட்டுக்கொள்ளா

மல் இருக்க வழிகள் காட்டியும் உதவி செய்தார் வக்கீல் சிவசங்கரன். இதற்குப் பதிலாக சாம்பசிவம் அவருக்குப் பல சமயங்களிலே பண உதவி செய்தார். இப்படி அவர் கொடுத்த பணம் லக்ஷக்கணக்காகிவிட்டது. கடைசியில் கிழவரின் தூண்டுதலின் பேரில் பணத்துக்கு ஒரு தஸ்தாவேஜு தயாரித்து வாங்கிக்கொண்டார் சாம்பசிவம். சாம்பசிவம் திடீரென்று மறைந்துவிடவே வக்கீலுக்குப் பயம் பிடித்துக்கொண்டது. வரும் வாரிசு பணத்தைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுத்தால் என்ன செய்வது? அந்தப் பத்திரத்தை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என்று முயற்சி செய்தார்.

''ஆனால் அதுவும் அந்த ரகசிய அறையிலேதான் இருந்தது. அந்த அறையின் பூட்டோ புது மாதிரியானது. அதிலிருக்கும் எழுத்துக்களை ஒரு குறிப்பிட்ட வார்த்தையை அமைப்பதன் மூலமே திறக்க முடியும். அது என்ன வார்த்தை என்பது சாம்பசிவத்துக்கும் கிழவருக்கும் மட்டுமே தெரியும். சாம்பசிவம் போய்விட்டார். கிழவரே முந்திக்கொண்டு உனக்குக் கடிதம் எழுதிவிட்டார். இதனால் வக்கீல் தமது சகோதரி நர்ஸ் நளினா, சகோதரனான டாக்டர் இவர்கள் மூலமாக மற்றவர்கள் அவரைச் சந்திக்க முடியாதபடி செய்துவிட்டு, தாம் மட்டும் சந்தித்து அந்தக் குறிச்சொல்லைச் சொல்லும்படி நிர்ப்பந்தித்தார். இந்த விஷயம் சந்தானத்துக்குத் தெரியுமோ என்று எண்ணி அவர் சந்தேகப்பட்டார்.

''நேற்று சந்தானம் வந்து உன்னை அவசரம் அவசரமாக அழைத்துப் போனது அவருக்குப் பயத்தை அளித்தது. அதனால்தான் நடு இரவில் சந்தானம் வெளியேறியதைக் கவனித்த நளினா, தன் அண்ணன் உதவியுடன் கிழவருக்கு மயக்கம் கொடுத்து, தூக்கிக் கொண்டு போய்விட்டாள். போகும் போது வேண்டுமென்றே அந்த அறையைக் கலைத்து ஒரு குழப்பமான தோற்றத்தை உண்டாக்கி விட்டுப் போனாள் அவள்.

''ஆனால் கிழவர்தான் பெரிய கைகாரர் ஆயிற்றே! உனக்குச் சொல்லவேண்டிய அந்த வார்த்தையைச் சிறு ஊசியால் தம்

கையில் காயம் செய்து அந்த ரத்தத்தால் எழுதி வைத்து விட்டார். இன்று ஒன்பது மணிக்கு மேல் அவர்களிடம் அதைச் சொல்லி விடுவதென்றும் முடிவு செய்திருந்தார்.''

இந்த இடத்திலே போலீஸ் அதிகாரி குறுக்கிட்டுச் சொன்னார்: ''ஆனால் இந்த ஹநுமந்தராவ் எல்லாருடைய திட்டங்களையும் தவிடு பொடியாக்கிவிட்டார். இப்போது இந்த மூன்று கோஷ்டியுமே போலீஸ் 'லாக்கப்'பில் பத்திரமாக இருக்கிறார்கள்.''

''சரி, மனோகர்! அந்த மாணிக்கத்தையும் தஸ்தாவேஜுகளையும் இங்கே கொடுத்துவிடு. கோர்ட்டிலே கேஸ் நடக்கும்போது உனக்குத் தெரிந்தவைகளையும் நீ சொல்ல வேண்டியிருக்கும். இனிமேல் நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நாளைக் காலை டாக்டர் சேகரும் உன் அம்மாவும் இங்கே வருவதாகக் கடிதம் வந்திருக்கிறது'' என்றார் இன்ஸ்பெக்டர். ''தாத்தா இப்போது எங்கேயிருக்கிறார்? அவரைப் பார்க்க வேண்டுமே!'' என்றான் மனோகர்.

''அவர் இப்போது ஆஸ்பத்திரியில் இருக்கிறார். அவர் உடம்பு, பயக்க மருந்து, வக்கீலின் ஹிம்சை, இவற்றைப் பொறுக்க முடியாமல் கேவலமாகிவிட்டது. உடனே புறப்படு. உன்னை அங்கே நான் அழைத்துப்போகிறேன்.''

25

ஆஸ்பத்திரி வராந்தாவில் சில விளக்குகள் மட்டும் அங்குமிங்குமாக எரிந்துகொண்டிருந்தன. ஆஸ்பத்திரியில் உள்ளே அங்குமிங்குமாக நோயாளிகளின் முனகல் கேட்டுக்கொண்டிருந்தது. அந்த வார்டின் ஒரு மூலையில் ஒரு கட்டிலைச் சுற்றிச் சிலர் நின்றுகொண்டிருந்தார்கள். அந்த நோயாளியிடமிருந்து தான் வாங்கிக்கொண்ட மாண வாக்குமூலத்துடன் ஜில்லா மாஜிஸ்டிரேட் வெளியே சென்றார்.

அவர் சென்ற பிறகு மனோகரன் கட்டிலை நெருங்கினான். அவன் தாத்தா முகம் வெளிறிப்போய் அதிலே படுத்துக் கிடந்தார். மனோகரின் கண்களில் கண்ணீர் பெருகியது. ''தாத்தா'' என்றான் மெல்ல. அவர் கண்களை விழித்துப் பார்த்தார். பிறகு அவன் கைகளைத் தமது கையில் எடுத்துவைத்துக்கொண்டு மெதுவாகப் பேசினார்.

''மனோகர்! உன் அம்மாவையும் அப்பாவையும் நான் ரொம்பக் கஷ்டப்படுத்திவிட்டேன், பணத்தாசையால். கோபத்திலே உன்னைக்கூட இவ்வளவு நாள் கவனியாமல் இருந்துவிட்டேன். சாம்பசிவத்துக்கும் கெட்ட வழிகளையெல்லாம் சொல்லிக் கொடுத்தேன். அதன் பலன்தான் இப்போது படாத பாடு படுகிறேன். கடைசியாக இப்போதாவது உன்னைப் பார்க்க முடிந்ததே! நீயாவது நல்ல வழியிலே நடந்து சௌக்கியமாக இருந்து இந்தச் சொத்தை அநுபவிக்க வேண்டும்.'' திணறித் திணறிப் பேச முடியாமல் பேசி நிறுத்தினார் அவர். கண்கள் தாமே மூடிக்கொண்டன. திடீரென்று ஓர் இருமல் அவரைக் குலுக்கியெடுத்தது. மறுகணம் கிழவர் பேச்சு மூச்சற்றுப் போனார்.

நாட்கள் சென்றன. வழக்கு நடந்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். போலீஸ் இலாகாவுக்குச் செய்த உதவிக்காக விசேஷ மெடல்கள் மனோகருக்கும் ராகவனுக்கும் கிடைத்தன. ராகவனுக்கு ரகசியப் போலீஸ் இலாகாவில் பயிற்சியும் வேலையும் கொடுக்கப்பட்டன.

மர்மங்களும் தீச்செயல்களும் நிறைந்திருந்த 'மஞ்சள் பங்களா', மனோகர், அவன் தாயார் இவர்களின் அமைதியான வாழ்க்கைக்கு நிலைக்களனாக அமைந்தது.

முற்றும்

***

கூத்தாடும் குரங்குப் பொம்மை

எஸ். டி. முகர்ஜி

நான் சொல்லுகிறபடி ஒரு குரங்குப் பொம்மை வாங்கு. அது செல்லுலாயிடு, அலுமினியம் போன்ற லேசான உலோகத்தால் செய்ததாக இருக்கவேண்டும். அது நீ சொல்கிறபடி கேட்கும். 'கூத்தாடு' என்று உத்தரவு போட்டால் தலையை ஆட்டிக்கொண்டு கூத்தாடும்.

செய்யும் முறை: இது ஒன்றும் பெரிய மந்திரவித்தை அல்ல. எல்லாம் தந்திரம்தான். ஆனால் பொம்மலாட்டம்போல் திரைக்குப் பின்னால் நின்றுகொண்டு நூலினால் ஆட்டுவிப்பது என்று நினைக்காதீர்கள். ரசாயன முறையை அடிப்படையாகக் கொண்டதே இது. அந்தப் பொம்மைக்குள்ளே கொஞ்சம் பாதரஸத்தை ஊற்றிவிடவேண்டும். அது கீழே விழாதபடி துவாரத்தை நன்றாக அடைத்துவிடவேண்டும். செல்லுலாயிடு டேப்பினால் அல்லது தகுந்த மெழுகுத் துணியால் இப்படிச் செய்துவிடலாம். பிறகு வெளியில் பார்ப்பதற்குச் சாதாரண பொம்மைபோல்தான் இருக்கும். அதை உஷ்ணப்படுத்தவேண்டும். அப்படிச் செய்தால் அது, 'தா, தை, தக தை' என்று கூத்தாடும். செய்து பார்த்துவிட்டுச் சொல்லுங்கள், அந்த வேடிக்கையை!

மாயமாக மறைந்து போ!

இந்த அதிசய வித்தையின் மூலம் நீங்கள் சின்ன சில்க் துணி, நாணயங்கள், மற்றும் சிறிய பொருள்கள்—இவைகளை மாயமாக மறைந்து போகச் செய்யலாம்.

விளக்கம்: இதற்குத் தேவையான பொருள்கள் உங்கள் வீட்டிலேயே சுலபமாகக் கிடைக்கக் கூடியவை. இரு நீண்ட (சுமார் ஓர் அடி) தகரக் குழாய்களை எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டும் ஒரு பக்கம் மூடப்பட்டும் ஒன்று மற்றொன்றுக்குள் செல்லும்படியாகவும் இருக்கட்டும். சிறிய குழாயின் வாய்ப்பக்கத்தில் உள்பக்கமாக முனை கூர்மையான கொக்கி ஒன்று இருக்கவேண்டும். இரண்டு குழாய்களுக்கும் உள்ளும் புறமும் கறுப்பு வர்ணம் பூசிவிடுங்கள். வித்தை காட்டும்போது முதலிலேயே சிறிய குழாயைப் பெரிய குழாயில் பொருத்தி ஒரே குழாயாகக் காட்டு. குழாயை இடதுகையில் பிடித்துக்கொண்டு, மறைந்து போக வேண்டிய பொருளை எதிரே உள்ளவர்களுக்குக் காட்டிவிட்டுக் குழாய்க்குள் போடு. பிறகு குழாயுடன் கைகளை முதுகுப்புறம் கொண்டுபோ. பொருள் உள்ள சிறிய குழாயை, வெளியே இருப்பவர்களுக்குத் தெரியாமல் எடுத்து, கொக்கியின் உதவியால் பின்புறம் உன் ஆடையில் மாட்டிவிடு. காலியாக உள்ள பெரிய குழாயை வெளியே காட்டினால், வேடிக்கை பார்ப்பவர்கள் எல்லாரும் அருமையான மாஜிக் வேலை என்று புகழ்வார்கள்.

காக்கையைப் பாடிய பெண்

கி. வா. ஜகந்நாதன்

நல்லதங்கை என்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள் அல்லவா? பழைய காலத்தில் அப்படி ஒரு நாடகம் நடக்கும். நல்லதம்பி, நல்லண்ணன் என்ற பெயர்களைப் போல நல்ல என்ற சிறப்போடு கூடிய பெயர் நல்லதங்கை. மிகவும் பழங்காலத்திலும் நல்ல தங்கை என்ற பெயர் இருந்து வந்தது. அதே பெயர் இல்லாவிட்டாலும் அந்த அர்த்தத்தை உடைய பெயர் இருந்தது. செள்ளை என்பது தங்கைக்குப் பெயர். இப்போது அது தமிழில் மறைந்து போய் விட்டது. செல்லலு என்று தங்கையைக் குறிக்கத் தெலுங்கில் ஒரு சொல் வழங்குகிறது. நச் செள்ளை என்பது ஒரு பெயர். நல்லதங்கை என்பது போன்ற பெயர்தான் அது. ந என்பது பெருமையைக் காட்டுவது.

நச்செள்ளை என்ற பெயரோடு ஒரு பெண் புலவர் இருந்தார். சின்ன வயசிலேயே அவருக்குக் கவி பாடும் திறமை உண்டாகிவிட்டது. ஒரு பெண்ணினுடைய கணவர் வெளியூருக்குப் போனார். போய்க் கொஞ்ச காலம் ஆயிற்று. வியாபாரமோ, தொழிலோ செய்து பணம் சம்பாதித்து வரத்தான் போனார். கொஞ்சம் நாள் ஆகவே, அவருடைய மனைவிக்குச் சிறிது வருத்தம் உண்டாயிற்று. ''போனவர், இன்னும் வரவில்லையே! எப்போது வருவாரோ!'' என்று மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள்.

அப்போது நச்செள்ளையார் அங்கே வந்தார். அவர் சின்னப் பெண்ணாக இருந்த காலம் அது. கணவனை எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண்மணியைப் பார்த்து ஆறுதல் சொன்னார். அப்போது ஒரு காக்கை விடாமல், ''கா, கா!'' என்று கரைந்து கொண்டே இருந்தது. காக்கை கரைந்தால் யாராவது உறவினர் வீட்டுக்கு வருவார்கள் என்று சொல்வார்கள். அது நச்செள்ளையாருக்குத் தெரியும். வருந்தின பெண்மணியைப் பார்த்து, ''இதோ பார்; காக்கை கரைகிறது. உன் கணவர் இன்றாவது நாளையாவது நிச்சயமாக வந்துவிடுவார். நீ வருத்தப் படாதே. அவரை வரவேற்கச் சித்தமாக இரு'' என்று சொன்னார்.

அவர் சொன்ன வாக்குப் பலித்தது. அன்று மாலையே ஊருக்குப் போயிருந்தவர் வந்துவிட்டார். அவருடைய மனைவியும் வருத்தம் நீங்கினாள். காக்கை பாடினியார் வாக்குப் பலித்ததைப் பாராட்டிப் புகழ்ந்தாள்.

அவளுடைய கணவர், ''நான் வரவில்லையே என்று நீ மிகவும் வருத்தம் அடைந்தாயோ?'' என்று கேட்டார். அப்போது அருகில் இருந்த நச்செள்ளையார், ''அதை ஏன் கேட்கிறீர்கள்? எப்போதும் முகத்தில் ஒளியில்லாமல் வாட்டமுற்று இருந்தாள் இவள். நல்ல வேளை! காக்கை கரைந்தது. அதைக் காட்டி நான் ஆறுதல் சொன்னேன்'' என்றார்.

'அப்படியானால் அவளுக்கு ஆறுதல் கூறிய உங்களுக்கு நான் மிக்க நன்றிகூற வேண்டும்'' என்றார் அந்த ஆடவர்.

''எனக்கா? சகுனம் சொல்லிய காக்கைக்குத்தான் நன்றி கூற வேண்டும். அது கரைந்ததைக் காட்டியல்லவா நான் ஆறுதல் சொன்னேன்!'' என்று சொன்ன நச்செள்ளையார் உடனே அந்தக் காக்கையைப் பாராட்டி ஒரு கவியைப் பாடினார்.

அக்காலத்தில் நள்ளி என்ற சிற்றரசர் ஒருவர் இருந்தார்.



அவர் பெரிய உபகாரி. அவருக்கு ஒரு நாடே சொந்தமாக இருந்தது. அந்த நாட்டில் நிறையக் காடுகள் இருந்தன. பல பசுக்கள் காடுகளில் வளர்ந்தன. அந்தக் காட்டில் உள்ள பசுவின் நெய்க்கு உள்ள மணமே தனி.

சோழ நாட்டில் தொண்டி என்று ஓர் ஊர் இருக்கிறது. அங்கே வயல்கள் மிகுதியாக இருக்கின்றன.

நச்செள்ளையார் காக்கையைப் பற்றிப் பாடின கவியில் நள்ளிக்குச் சொந்தமான காட்டுப் பசுவின் நெய்யையும் தொண்டியில் விளையும் நெல்லையும் சொல்லியிருக்கிறார். அதனால்தான் அவற்றைப் பற்றி இங்கே சொன்னேன்.

"நல்ல சகுனமாகக் கரைந்த காக்கைக்கு நல்ல சோற்றைப் போட வேண்டும். நம்முடைய நன்றியறிவைக் காட்ட வேண்டுமல்லவா?" என்று அந்தப் பெண் புலவர் சொல்கிறார். எப்படிப் போட வேண்டும் என்பதை அழகாகச் சொல்கிறார்.

"பலமான தேரிலே போகிற நள்ளி இருக்கிறானே, அவனுடைய காட்டில் ஆயர்கள் பலர் வாழ்கிறார்கள். அவர்கள் பசு மாடுகளை

நன்றாக வளர்க்கிறார்கள். பால் கறந்து பிறகு வெண்ணெய் எடுத்து நெய் காய்ச்சுகிறார்கள். அங்கே போய்ச் சுத்தமான நெய்யை வாங்கிவர வேண்டும். எதற்குத் தெரியுமா? நல்ல நெய்ப் பொங்கல் பண்ணுவதற்குத்தான். பிறகு, தொண்டியில் நன்றாக விளைந்த நெல்லை வாங்கிவர வேண்டும். அங்கேதான் செம்பட்டையாக இராமல் அரிசி வெளுப்பாகக் கிடைக்கும். அந்த அரிசியைச் சமைத்து நிறைய நெய் விட்டுச் செய்த பொங்கலை இந்தக் காக்கைக்குக் கொடுக்க வேண்டும். சமைத்தவுடனே, 'கா,கா' என்று காக்கைக்குச் சோற்றை இரைக்கிறோமே, அப்படிப் போடக் கூடாது. பாத்திரத்தில் கிளிக்கு ஏந்துவதுபோல ஏந்த வேண்டும். ஒரு பாத்திரத்தில் அல்ல, ஏழு பாத்திரங்களில் ஏந்தினாலும் அது செய்த உபகாரத்துக்கு ஈடாகாது; சிறிதென்றே சொல்ல வேண்டும். அது செய்த நன்றி எத்தகையது! ''என் தோழி உங்கள் பிரிவினால் மிகவும் வாடிப் போனாள். இவளுடைய பெரிய தோள் மெலிந்து போயிற்று. அப்படி மெலிந்த வருத்தம் நீங்கும்படியாக, விருந்தாளி வருவார் என்பதைத் தெரிந்துகொள்ள இந்தக் காக்கை கரைந்தது. அதற்கு உணவாக ஏழு பாத்திரத்தில் நெய்ப் பொங்கலை ஏந்தினாலும் சிறிதுதான்.''

இப்படி ஒரு பாட்டை நச்செள்ளையார் பாடினார். அதைக் கேட்ட அந்த மனிதரும் அவருடைய மனைவியும் வியப்பில் ஆழ்ந்தனர். மற்றவர்களுக்கும் இந்தச் சிறிய பெண் இவ்வளவு அழகான பாட்டைப் பாடியதைக் கண்டு ஆச்சரியம் உண்டாயிற்று. ஊரே புகழ்ந்தது. புலவர்களும் பாராட்டினார்கள். அவர் காக்கையைப் பாடினதால் அவருக்குக் காக்கை பாடினியார் என்ற பட்டப் பெயர் உண்டாயிற்று. காக்கை பாடினியார் என்று தனியாகவோ, காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்று சொந்தப் பெயருடன் சேர்த்தோ மக்கள் அவரைக் குறிக்கத் தொடங்கினார்கள்.

பிறகு அவர் பல பாடல்களைப் பாடினார். சேரன் அரசாண்டிருந்த சேர நாட்டுக்குச் சென்றார். அப்போது ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் என்ற அரசன் சேர நாட்டை ஆண்டுகொண்டிருந்தான். அவனிடம் சென்று அவனைப் பாராட்டிப் பத்துப் பாடல்களைப் பாடினார். அவற்றைக் கேட்ட மன்னன் மிகவும் மகிழ்ந்து ஒன்பது துலாம் பொன்னும் லட்சம் பொற்காசும் வழங்கினான். ''நல்ல ஆபரணம் செய்து போட்டுக்கொள்ளுங்கள்'' என்று சொல்லி அந்தப் பொன்னை அளித்தான்.

அது முதல் காக்கை பாடினியாருடைய புகழ் அதிகமாயிற்று. அவர் மதுரைக்கும் சென்று அங்கே உள்ள சங்கப் புலவர்களைப் பார்த்துப் பழகினார். பாண்டிய மன்னனைக் கண்டு தம் புலமையை வெளிப்படுத்திப் பரிசு பெற்றார்.

கவி பாடுவதிலே சிறந்த காக்கை பாடினியார் கவியின் இலக்கணம் நன்றாகத் தெரிந்தவர். கவியின் இலக்கணத்தை யாப்பிலக்கணம் என்று சொல்வார்கள் யாப்பு என்பது கவிக்கு ஒரு பெயர். மிகவும் படித்த பெரிய புலவர்களே இலக்கணத்தை இயற்றும் அறிவைப் பெறுவார்கள். காக்கை பாடினியார் ஒரு யாப்பிலக்கணத்தை இயற்றினார். அது அவர் பெயராலேயே "காக்கைப் பாடினியம்" என்று பெயர் பெற்றது. தொல்காப்பியர் இயற்றியது தொல்காப்பியம். அகத்தியர் இயற்றியது அகத்தியம். அதைப்போலக் காக்கை பாடினியார் இயற்றியது காக்கைப் பாடினியம்.

முதல் முதலில் காக்கையைப் பாடத் தொடங்கிய நச்செள்ளையார் இலக்கணம் இயற்றும் நிலைக்கு உயர்ந்து சிறந்து நின்றார் என்றால் பழைய காலத்தில் பெண்களுக்கும் எவ்வளவு பெருமை இருந்தது என்பது தெரியவரும்.

நன்றி

ஏ. எஸ். ராகவன்

பாகன் ராம குருப் ரொம்ப நல்லவன். முப்பது வருஷங்களாக அந்த ஊரில் வாழ்ந்தவன். குழந்தை போல அவனைப் பின்தொடர்ந்து வரும் யானையின் கம்பீர நடையும், மணி ஓசையும், குனிந்து தங்களை ஏற்றிக்கொள்ளத் தயாராகும் தயாளமும் குழந்தைகளுக்குக் குதூகலமாக இருக்கும், தேர், திருவிழா வந்தால் கொம்மாளம்தான்.

அந்த ராம குருப் திடீரென்று இறந்துவிட்டான். கோயில் அதிகாரிகள் கவலை அடைந்தார்கள். யானை சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்து விட்டது. ஆகாரம் எதுவும் உட்கொள்ளாது அழுத வண்ணமே இருந்தது. யாரும் அதை நெருங்கப் பயந்தார்கள்.

கோயிலுக்குப் பக்கத்தில் சிறு குடிசை. அதில்தான் ராம குருப் வசித்து வந்தான். அவன் இருந்த வரை அந்தக் குடும்பத்தின் நிலைமை யாருக்கும் தெரியாது. நன்றாகத்தான் வாழ்ந்து வந்தான். அப்படித்தான் பிறர் நினைத்தார்கள். ஆனால் கணக்குப் பார்த்தால், ராம குருப்புக்கு ஏராளமான கடன் இருப்பது தெரிந்தது. அவனுடைய மனைவி பார்வதி தன் மூன்று குழந்தைகளுடன், கவலையும் எதிர் காலத்தைப் பற்றிய பயமும் சேர, அழுத வண்ணம் இருந்தாள்.

சின்னப் பயல் நாராயணன், ''ஏனம்மா, அப்பா நெறையக் காசு வாங்கினாங்களே! யானைமேலே உக்கார ரெண்டணா வாங்குவாங்களே, அதெல்லாம் எங்கே, அம்மா?'' என்று கேட்டான்.

பார்வதி முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். குழந்தை கேட்கிற கேள்விக்கு என்ன பதில் சொல்வாள்? அவனுக்கோர் வயது பத்துதான் ஆகிறது. அப்படி இருந்தும் குடும்பத்தின் வறுமை எப்படியோ அந்த இளம் நெஞ்சுக்குத் தெரிந்திருந்தது. இல்லாவிட்டால் இப்படிக் கேட்பானா?

''அப்பா சொல்வாங்க, அந்தக் காசெல்லாம் எனக்குத்தான்னு. நான் அதிலே நல்ல டவுஸர் வாங்கிக்குவேன்; சட்டை தெச்சுக்குவேன்......'' அவன் மேலும் தொடர்ந்தான்.

ராம குருப்புக்கு நல்ல வரும்படிதான் கிடைத்துவந்தது. ஆனால் அந்தப் பணமெல்லாம் எங்கே போயிற்று என்பது பார்வதிக்குத் தெரியும். அவன் சீட்டு ஆடுவதில் மோகம் கொண்டவன். காசுகளை விட்டெறிந்து அலட்சியமாக ஆடுவான். வரும்படி வருகிறதா,



இல்லையா என்று அவனுக்குத் தெரியாது. அப்படி எதுவும் அவன் கொண்டுவந்ததில்லை. வரும்படி வருவதில்லையே என்று ஆடாமலும் இருக்க மாட்டான். இதை எல்லாம் குழந்தையிடம் எப்படிச் சொல்வது?

''பசிக்குதம்மா'' என்று முறையிட்டது மூத்த குழந்தை.

கஞ்சியை ஊற்றினள் பார்வதி. வாசல்புறம் கிருஷ்ணன் வந்து நின்று, ''அம்மா'' என்று கூப்பிட்டான். அவன் கிருஷ்ணன் கோயில் சேவகன். ராம குருப்புக்கு நெருங்கிய நண்பன்.

''என்ன, கிருஷ்ணு?'' என்று கேட்டாள் பார்வதி.

''யானையை விற்கப் போருங்களாம். வேற யானை வரப் போவுதாம்'' என்ருன் கிருஷ்ணன்.

அப்படியென்ருல், இத்தனை நாள் வாழ்ந்த வீட்டை வரப்போகும் வேருருவனுக்கு விட்டு விட வேண்டும். அவள் எங்கே போவாள்? குழந்தைகளின் முகத்தைப் பார்த்தாள். அவர்கள் கஞ்சியை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்தார்கள். கணவனின் நினைவு வந்தது. யானைக்கு ஆகாரம் கோயிலிலிருந்து வரும். பசியால் தான் தவித்தாலும், அதில் துளிக்கூடத் தொடமாட்டான் ராம குருப். அன்போடு யானைக்கு ஊட்டுவான். அதன் ஒரு கவளம் அவன் பசிக்குப் போதும். ஆனல் தொடமாட்டான். அப்படி வளர்த்த யானை! விசுவாசமாக உழைத்த கோயில். அதை எல்லாம் இப்போது எண்ணி என்ன செய்வது?

எல்லோருமாகச் சேர்ந்து நிரந்தரமாகத் தன்னை நடுத்தெருவில் நிறுத்தி விட்டதாகத்தான் அவளால் எண்ண முடிந்தது. துயரம் பொங்கி வந்தது. உள்ளே போய் விட்டாள்.

நாராயணன் வாயைத் துடைத்துக்கொண்டு வெளியே வந்தான். அவனைவிட இரண்டு வயது மூத்த கேசவன் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டான்.

''அம்மா ஏன் அழருங்க?'' என்று நாராயணன் கேட்டான்.

''அப்பா இல்லேன்னுதான். இது தெரியல்லியா?'' என்ருன் கேசவன்.

''ஆமாண்டா, எனக்கும்தான் அழுகையா வருது'' என்ருன் நாராயணன்.

''இப்ப என்ன செய்யறது? அம்மா அழக்கூடாது.'' - ஏதோ தீர்மானத்துக்கு வந்தவன் போலக் கேசவன் சொன்னன்.

நாராயணன் அதை ஆமோதித்தான். எப்படியாவது தாயை அழாமல் காப்பாற்றவேண்டும் என்கிற துடிப்பு இரு சிறுவர்களுக்கும் ஏற்பட்டது.

இருவரும் எழுந்தார்கள், யானை கட்டியிருந்த மண்டபத்தை நோக்கி நடந்தார்கள். படுத்துக் கிடந்த யானை இவர்களைக் கண்டதும் துதிக்கையை ஆட்டியது. நாராயணனுக்குக் கோபம் வந்தது. ''எல்லாம் உன்னுல்தான். அப்பா உன்னுல்தான் செத்துப் போனுங்க. உன்னைச் சும்மா விடமாட்டேன். உண்மையைச் சொல், அப்பா எங்கே?'' என்று சீறினன்.

கேசவன் அவனைவிடக் கொஞ்சம் விவரம் தெரிந்தவன் அல்லவா? தம்பியின் தோள்பட்டையைப் பிடித்து, ''அடே, அது என்னடா செய்யும்? கொஞ்சம் நிதானமாகக் கேளு'' என்று யானையின் அருகில் சென்ருன். அதைத் தடவிக் கொடுத்தான்; துதிக்கையை வருடினன்; தந்தங்களைத் தட்டிப் பார்த்தான். முதுகைப் பிடித்து விட்டான். அந்த உபசரணைகளை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு பேசாது இருந்தது யானை.

''அடே நாலு நாளாப் பட்டினிடா, நம்ம லட்சுமி! கோயிலுக்குப் போயி சாப்பாடு வாங்கிட்டு வரலாம்'' என்ருன்.

''நான் மாட்டேன், போ!''

''அடே, பாவம்டா!''

''நீ வேணும்ணு போ.''

''பாத்தியா, பாத்தியா? அது என்னடா பண்ணும்? நல்லாப்



பாரு, நம்ம அம்மா மாதிரி, அதுவும் அழுவுது.''

''அப்படியா?'' நாராயணன் துள்ளி எழுந்தான். யானையைக் கட்டி அணைத்துக் கொண்டான்.

இந்தச் சமயம் கோயில் அதிகாரி அந்தப் பக்கம் வந்தார். தற்செயலாக இந்தக் காட்சியைப் பார்த்தார். ''நம்ப ராம குருப்பின் பிள்ளைகளா? யானை சாதுவாகப் படுத்திருக்கே!'' என்கிற வியப்பு மேலிட நெருங்கினார். ஏனெனில் இதுவரை யாருமே நெருங்கப் பயப்பட்ட பிராணியாக அது இருந்தது. ராம குருப் இல்லாமல் அதை யாராலும் அடக்க முடியாது என்றுதான் அவர் முடிவு செய்திருந்தார்.

''சாப்பாடு கொண்டு வரச் சொல்லவா?'' என்று கேட்டார்.

''சொல்லுங்க'' என்றான் நாராயணன்.

சாப்பாடு வந்தது. அவனே அன்போடு ஊட்டினான். யானை முதலில் முரண்டு பண்ணியது. ஆனால் அவன் விடவில்லை. ''நீ சாப்பிடாட்டி, நானும் இனிமே சாப்பிட மாட்டேன்'' என்றான். அதைப் புரிந்துகொண்டுதானோ என்னவோ, யானை சாப்பிட்டது,

அதிகாரி ஆச்சரியத்தோடு பார்த்தார். யானை எழுந்தது. காலை இழுத்து, இழுத்து எங்கேயோ செல்ல முயன்றது.

''காலை அவுத்து விடுங்க'' என்றான் நாராயணன்.

''ஐயோ, வேண்டாம்'' என்று பயந்தார் அதிகாரி.

நாராயணன் கேட்கவில்லை. தானே குனிந்து கால் சங்கிலியை அவிழ்த்து விட்டான். யானை மெல்ல நடந்து வெளியே வந்தது. நாராயணன் பின்னால் வந்தான்.

கூட்டம் கூடிவிட்டது. ஒரு வேளை குளிப்பதற்காக ஆற்றை நோக்கிச் செல்கிறதோ என்று அதிகாரி நினைத்தார்.

கோயிலுக்கு வட புறத்தில் எதிரே ஒரு சிறு மண்டபம். அங்கே வந்து நின்றது யானை. அந்த இடத்தில்தான் உற்சவ சமயங்களில் அது கம்பீரமாக நின்று பிளிறும். குழந்தைகளை முதுகில் ஏற்றி இறக்கும். ஏராளமான காசு, பணங்களையும், பழம், தேங்காய்களையும் பெற்றுக்கொள்ளும்.

மண்டபத்தின் தென்புறத் தூண் அருகில் சிறு பாறை கிடந்தது. அதைப் புரட்டிவிட்டது யானை.

என்ன ஆச்சரியம்! அதன் கீழே சிறு குழி ஒன்று தென்பட்டது. அதில் ஏராளமான சில்லறைகளாகப் பணம் கொட்டிக் கிடந்தது.

நாராயணன் தாவிக் குதித்து அவற்றை வாரினான். ''பாத்தியா, எனக்கு அப்பவே தெரியும். அப்பா பணத்தை எல்லாம் இங்கேதான் வெச்சிருக்காங்க'' என்று கூவினான்.

அதிகாரி வாயைப் பிளந்தார். 'இது என்ன கனவா, நனவா?' என்று புரியவில்லை அவருக்கு.

உண்மைதான். அந்தச் சேமிப்பு விசுவாசமான 'லட்சுமி'யின் முன் யோசனை. தனக்குக் கிடைக்கும் பணத்தில் சிலவற்றை அது இந்தக் குழியில் போட்டு வைத்திருக்கிறது.

''இன்று முதல் நீதான் பாகன். வேறு யானை வாங்கப் போவதில்லை'' என்றார் அதிகாரி.

'சரி' என்று தலையை ஆட்டினான் நாராயணன் நன்றியோடு.

பரீட்சை முடிவு

எஸ். ரங்கநாயகி

ரகு: ஒரு மாணுக்கன்.
வாசு: அவன் சிநேகிதன்.
மணி: கணக்கு வாத்தியார் மகன். மற்றும் ரகுவின் அம்மா, அப்பா, மாமா.

1

அப்பா: ஏண்டி, உன் பிள்ளை ரகு எங்கே?

அம்மா: உங்க பிள்ளை ரகு எங்கே போயிருப்பான்? விளையாடத்தான் போனுன்.

அப்பா: சரி சரி, பரீக்ஷை வந்துடுத்தே, அவன் படிச்சானு, இல்லையான்னு கவனிக்கக் காணேம்.

அம்மா: எல்லாம் கவனிச்சுண்டு தான் இருக்கேன். பாவம், குழந்தை இரண்டு நாளா ராப் பகலாப் படிக்கிறுன்.

அப்பா: ஐயோ கடவுளே, நீ கவனிச்ச லட்சணம் அவ்வளவு தான். இரண்டு நாளாக ஸ்கூல் லைப்ரரியிலிருந்து இரண்டு தமிழ் நாவல் எடுத்துண்டு வந்து ரொம்பச் சுவாரஸ்யமாகப் படிச்சிண்டு இருந்தான். என்னடா படிக்கிறேன்னு கேட்டால் ஸ்கூல் புஸ்தகம்னு சொன்னுன். ஸ்கூல் பாடப் புஸ்தகம்னு நம்ம நினைச்சோம். கடைசியில் நேற்று இரவு 'கேள்வி கேட்கிறேன், வாடா'ன்னு புஸ்தகத்தை எடுத்தால் விஷயம் தெரிந்தது. அப்போ நீ கும்பகர்ணன் வீட்டில் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தே.

அம்மா: போகட்டும், ஏதோ நடுவில் சிறிது நேரம் கதைப் புத்தகம் படித்திருப்பான். அதுக்காக அவனைத் திட்டணுமா? இன்று காலையிலிருந்து இங்கிலீஷ் புஸ்தகம் படிச்சிண்டேதான் இருந்தான்.

அப்பா: எப்பொழுதும் இங்கிலீஷ் புஸ்தகத்தை மட்டும் படிச்சிண்டிருந்தா போதுமா? கணக்கிலே ரொம்ப மோசமாக இருக்கிறுன். கணக்கு வாத்தியார் என்னைப் பார்த்துச் சொன்னுர். போட்டுப் போட்டுப் பழகினுல் தானே கணக்கு வரும்?

(ரகு வருகிறுன்)

ஏண்டா ரகு, ஊரெல்லாம் சுத்திண்டு இருக்கியே? கணக்கைப் போடுடா.

ரகு: அப்பா, நானே உங்களிடம் கேக்கணும்னு நினைச்சேன். புஸ்தகத்தில் 20 கணக்குத் தெரியல்லை. சொல்லிக்கொடுங்கோ.

அப்பா: ஏண்டா, வாத்தியாரைக் கேட்பதுதானே?

ரகு: கேட்டேன். அவர் புக் ஆன்ஸரைப் பார்த்துக் கணக்கைப் போடச் சொல்லிவிட்டார்.

அம்மா: பார்த்தீர்களா, இந்த மாதிரி வாத்தியார் இருந்தால் குழந்தைகளுக்கு எப்படிப் படிப்பு வரும்?

அப்பா: நீ சும்மா இரு. வாத்தியார் ஒவ்வொரு கணக்கும் போட்டுத் தருவாரா? போடும் வழி தான் சொல்லித் தருவார். உன் அழகான பிள்ளைக்கு ஒரு கணக்கும் போட வராது.

அம்மா: டேய் ரகு, கணக்கெல்லாம் எடுத்துண்டு வந்து அப்பாவிடம் கேட்டுக்கோடா.

அப்பா: சரிதான், அவன் கணக்கெல்லாம் நான் போடணுமா? அவன் பரீக்ஷை எழுதப் போகிறுனு, நான் எழுதப் போகிறேனு?

அம்மா: உங்களையா போடச் சொன்னேன்? எப்படிப் போடறதுன்னு சொல்லிக்கொடுத்தா, அவன் போடறுன்.

அப்பா: எனக்கு வேறு வேலை கிடையாதா? இனிமேல் அவன் கணக்கெல்லாம் நான் படிச்சுப் புரிஞ்சுண்டு அவனுக்குப் போட்டுத்தர என்னுல் முடியாது.

அம்மா: ஐயோ ராமா, அவன் கணக்கை நீங்க படிச்சு வேறே தெரிஞ்சுக்கணுமா? பீ. ஏ. பாஸ் செய்து இருக்கிறீர்களே! அப்படியே சொல்லித் தர முடியாதா?

அப்பா: போடீ பைத்தியம், ட்மழைக்காவது ஸ்கூலில் ஒதுங்காத உனக்கு விஷயம் எப்படித் தெரியும்? நாங்க படிச்ச காலம் வேறே, இந்தக் காலம் வேறே, நான் படித்ததெல்லாம் ஆங்கிலத்தில். இனிமே உன் பிள்ளைக்காக என்னால் தமிழ்க் கணக்குக் கற்றுக் கொள்ள முடியாது.

அம்மா: நீங்களே இப்படி என்றால் அவன் என்ன பண்ணுவான்?

அப்பா: வாத்தியார் சொல்லிக் கொடுத்தபடி போடட்டும். டேய் ரகு, எப்படியாவது கணக்கில் 50% வாங்கணும், இல்லேன்னா, இந்த வருஷ லீவில் கோடைக்கானலுக்கு அழைத்துப்போக மாட்டேன்.

2

வாசு: என்னடா ரகு, கணக்குப் பரீக்ஷை எழுதினவன் போலே இருக்கு உன் முகம்?

ரகு: உபமான ரூபத்திலே சொல்லாதேடா, கணக்குப் பரீக்ஷை எழுதின அழகேதான்!

வாசு: சரிதான். அகத்தின் அழகு முகத்திலே தெரியாதா? என்னைப் பார், நான் எவ்வளவு குஷியாக இருக்கிறேன்?

ரகு: உனக்கென்னடா? நீ ராஜா பிள்ளை. பாஸானாலும் பெயிலானாலும் உன்னை ஒருவரும் கேட்கமாட்டார்கள். என் ஸ்திதி அப்படி இல்லையே.

வாசு: போடா பைத்தியமே. எனக்கு மட்டும் திட்டு கிடைக்காதா? ஆனால் சுகதுக்கங்களைச் சமமாகப் பாவிக்கிறவன் நான்.

ரகு: திட்டு மட்டும் கிடைத்தால் பாதகமில்லையே. அப்பா வேறு ஒரு நிபந்தனை போட்டு விட்டாரே. பாஸானால்தான் கோடைக்கானலாம்! இந்த அழகில் நாளைக்கு எங்க மாமா ஊரிலேருந்து வரப்போகிறார். கணக்குக்கு என்னடா விடை என்று அலசிப் பார்க்க ஆரம்பித்து விடுவார்.

வாசு: அப்படின்னா ஆபத்துக் கட்டத்தில் இருக்கேன்னு சொல்லு;

ரகு: அப்பாடி, இப்பதான் உனக்கு விஷயம் புரிஞ்சுதா? இந்தக் கணக்குப் பரீட்சையில் பாஸாக நீதான் ஒரு வழி சொல்லணும்.

வாசு: ஏண்டா, அந்தக் கணக்கு வாத்தியாரையே ஒரு தடவை பார்த்துவிட்டு வாயேண்டா!

ரகு: ஐயையோ, அவரைப் பார்த்தாலே எனக்குக் குடல் நடுக்கமாச்சே!

வாசு: சரிடா, நான் சொல்ற படி செய். அந்தக் கணக்கு வாத்தியார் பிள்ளையை எனக்கு நன்ருகத் தெரியும். அவனுக்கு இனிப்புப் பண்டங்கள் ரொம்பவும் பிடிக்கும். அவனை ஒரு நாள் ஹோட்டலுக்கு அழைத்துப்போய் நிறைய ஸ்வீட் வாங்கிக் கொடுத்துவிடு. அவனை, அவன் அப்பாவிடம் சொல்லி, உன் பேப்பரைக் கொஞ்சம் கவனிக்கச் சொல்லலாம்.

ரகு: டிபன் வாங்கித்தர காசு வேண்டாமா?

வாசு: அதுக்கும் மூக்கால் அழுதுண்டு இருந்தா, காரியம் எப்படி ஆகும்? உன் கஞ்சத் தனத்தை மூட்டை கட்டி வைக்க வேண்டியதுதான்.

ரகு: சரிடா, என் பாக்கெட் பணத்திலிருந்து செலவழிக்கிறேன். நாளைக்கு அவனை அழைத்து வந்து விடு.

3

(வாசு, ரகு, மணி மூவரும் ஹோட்டலுக்கு வருகிருர்கள்.)

வாசு: டேய் ரகு, இந்த மணியைப் போன்ற பையன் நமக்குச் சிநேகிதனுகக் கிடைத்தது நம்ம அதிருஷ்டம்தாண்டா.

ரகு: பார்த்தாலே அவன் குணம் தெரிஞ்சுக்க முடியும் போலேயிருக்கு. மணி, இன்னொரு லட்டு சாப்பிடுடா.

மணி: வேண்டாம், இதுவே போதும்.

வாசு: அட, சும்மாச் சாப்பிடுடா. நம்ம ரகு ரொம்பத் தாராளப் பேர் வழி. அவன் கிட்டே சங்கோசமே படவேண்டாம். சர்வர், இந்தப் பையனுக்கு ஒரு லட்டும் எனக்கு ஒரு லட்டும் கொண்டு வா. ஏண்டா ரகு, நீயும் சாப்பிடுடா. பரீக்ஷையைப்பத்திக் கலங்காதே

ரகு: பரீக்ஷைப் பயமெல்லாம் இல்லேடா, வயிறு சரியில்லே. மணி,

எண்ணிலே படங்கள்

'மூட்டை'



1 முதல் 7 வரையில்

உனக்கு ஜிலேபி போடச் சொல்லட்டுமா?

மணி: வேண்டாம் வேண்டாம்.

வாசு: டேய் ரகு, நீ சுத்தப் பைத்தியம். 'வேண்டுமா' என்று கேட்டால் 'வேண்டாம்' என்றுதானே சொல்வோம்? அவனைக் கேட்காமலே கொண்டுவரச் சொல்லுடா, சர்வர், இரண்டு தட்டிலே ஜிலேபி எடுத்துண்டு வா. அதோடு மூன்று தட்டிலே பாதாம் பர்பியும் எடுத்துண்டு வா. டேய் ரகு, பாதாம் பர்பி மட்டுமாவது சாப்பிடுடா.

ரகு: (பர்ஸைத் தொட்டுப் பார்த்துக்கொண்டே) ஆகட்டும்டா.

வாசு: டேய் மணி, இந்த ரகு இருக்கானே, அவன் ரொம்ப நல்ல பிள்ளை, நன்றாகப் படிக்கிறான். ஆனால் அவனுடைய ஒரு குணம் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. ஒரு தப்புச் செய்துவிட்டால் அதையே நினைத்து உருகிப் போவான்.

மணி: ஐயோ பாவம், அப்படி என்ன செய்துட்டான்?

வாசு: அதை ஏன் கேட்கிறாய்? இந்தத் தடவை ரொம்பத் தலைவலியாக இருந்ததால் கணக்குச் சரியாகப் போடலை. அதுக்காக அழறான்.

மணி: அடாடா, அப்படியா?

வாசு: ஆமாம். எவ்வளவோ தடவைகள் நானும் சொன்னேன், 'டேய் ரகு, கவலைப்படாதே. நம்ம மணியிடம் சொல்லிக் கொள்ளலாம்' என்று. அவனுக்கு இன்னும் பயம்தான்.

மணி: ஐயையோ, கணக்குப் பேப்பரைத் தொட்டால் அப்பா கொன்னுடுவாரே!

வாசு: உன்னை யாருடா கணக்குப் பேப்பரைத் தொடச் சொன்னது? உங்க அப்பாவிடம் நீயே சிபார்சு செய்து, 'ஒன்பதாவது வகுப்பில் படிக்கும் ரகு என்ற பையனிடம் 'கொஞ்சம் தயவு வையுங்கள்' என்று சொல்லிவிடு. அதுவே போதும். உங்கப்பாவிற்கு ஆசை மகனாச்சே நீ! இந்த விஷயத்தை மறக்காதே. ரகு உன்னைத்தான் நம்பிண்டு இருக்கான்.

மணி: என்னால் முடிந்தவரை முயற்சி செய்கிறேன். சரி, நான் போகிறேன். (போகிறான்)

வாசு: என்னடா ரகு, எப்படி என் தந்திரம்? மணி நிச்சயம் சிபார்சு செய்துவிடுவான். கவலைப்

படாமல் இரு. இப்ப நான் அவசரமா மாமா வீட்டுக்குப் போகணும். போய் வரட்டுமா? (போகிறுன்)

ரகு: என்ன தந்திரமோ, என்ன மாயமோ! மணிக்கு ஸ்வீட்ஸ் வாங்கித் தரும் சாக்கில் வாசு நன்ருக மொக்கிவிட்டான். என் வயிறு நிறையாமலே என் பாக்கெட் பணம் ஐந்து ரூபாயும் காலியாகிவிட்டது.

4

(ரகு வீடு. மாமா வந்து கணக்குக் கேள்வித் தாளைப் பார்க்கிருர்)

மாமா: டேய் ரகு, இங்கே வந்துகொண்டே இருந்தாயே, அதற்குள் நடுவில் வாசலில் ஏதுக்குடா ஓடறே?

ரகு: (பயந்தபடி) வந்து... ஒன்றுமில்லே மாமா.., சும்மா..

மாமா: சும்மாவாவது, கிம்மாவாவது? இங்கே கிட்டே வந்து கை நீட்டுடா.

ரகு: ஐயோ மாமா, இனிமே கணக்கெல்லாம் சரியாகப் போடுகிறேன். லீவிலே கத்துக்கறேன்!

மாமா: அட சட், உன்னை அடிக்கவா கூப்பிடுகிறேன்? அதிசயமாகப் பதினைந்து கணக்கில் பன்னிரண்டு கணக்குச் சரியாகப் போட்டிருக்கயேன்னு கங்ராஜுலேஷன் கொடுக்கக் கையை நீட்டச் சொன்னேன். அதுக்குள்ளே பயந்துட்டியே. சீதா, உன் பிள்ளை அதிசயமா கணக்கிலே 85 மார்க்கு வாங்கிடுவான்.

அம்மா: நிஜமாகவா அண்ணு?

மாமா: கேள்விப் பேப்பரிலே அவனுக்கு வந்திருக்கும் விடையை எழுதிண்டு வந்திருக்கானே, அதைப் பார்த்துத் தெரிஞ்சுண்டேன்.

அப்பா: அட ராமா, இதை இவன் முதலிலேயே சொல்லக்கூடாதோ? அந்த வாத்தியாரிடம் ஐந்து ரூபாய்க்கு ஒரு ரஸகுல்லா டின் வாங்கிக் கொடுத்து என் பிள்ளையைக் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு வந்தேனே! விஷயம் தெரிஞ்சிருந்தா ஐந்து ரூபாய் செலவழித்திருக்க மாட்டேனே!

அம்மா: சரியாப் போச்சு. நீங்க வேறே செலவு செய்தீர்களா? ரகு கணக்கில் பெயிலாகிவிட்டால் உங்களிடம் அடி வாங்கப் போகிருனேன்னு நானும் அவனைப் பாஸாக்க யோசனை செய்தேன். கணக்கு வாத்தியார் மனைவியைப் பார்த்து, 'எங்க அண்ணு பம்பாயிலேருந்து ஸ்பெஷலா உயர்ந்த ரக எவர்ஸில்வர் டம்ளர் வாங்கிண்டு வந்தான்'னு சொல்லி, இங்கேயே ஒரு கடையில் எவர்ஸில்வர் டம்ளர் வாங்கிக்கொண்டு போய்க் கொடுத்துவிட்டு, 'உங்க வீட்டுக்காரரிடம் சொல்லி எங்க வீட்டுப் பிள்ளையைக் கொஞ்சம் கவனிக்கச் சொல்லுங்கோ'ன்னு சொல்லிட்டு வந்தேன். இந்தப் பிள்ளை எல்லாக் கணக்கையும் சரியாகப் போட்டிருப்பதாகச் சொல்லியிருக்கக் கூடாதா? சுத்த முட்டாள்.

ரகு: நீ ஏம்மா, என் வயிற்றெரிச்சலைக் கிளப்பறே? ஸ்கூல் பையன்களுடைய விடை ஒன்றுக்காவது என் விடை ஒத்துவரவில்லே. எல்லாம் தப்பாக இருக்கப் போகிறதேன்னு வாத்தியார் பிள்ளைக்கு டிபன் வாங்கிக் கொடுத்து, 'அப்பாவைக் கவனிச்சுக்கச் சொல்லுடா'ன்னேன்.

(வாசு வருகிருன்)

ரகு: டேய் வாசு, கணக்கில் நான் பாஸ்!

வாசு: வெரி ஸாரி, ரகு, நீ குதிக்கிறதைப் பார்த்தா உனக்கு இன்னும் விஷயம் தெரில்லேன்னு நினைக்கிறேன். கணக்கிலே ரீ-எக்ஸாம் வைக்கப் போகிருர்கள். பரீக்ஷை பேப்பர் அவுட் ஆயிடுத்துன்னு ஒரு பேச்சு கிளம்பியிருக்காம், மேலும் சில மாணவர்கள் காபி அடித்திருக்கிருர்கள் என்ற சந்தேகம் இருப்பதாலும் மறுபடி கணக்குப் பரீக்ஷை நடத்தப் போகிருர்கள். அந்தப் பேப்பரை வேறே ஒரு வாத்தியார் திருத்தப் போகிருராம்.

ரகு: ஹா கடவுளே, இதுவும் உன் சோதனையா? பணமும் போச்சு, சரியாகப் போட்ட கணக்கும் போச்சே!

நண்பன் நாணு

'சுருமீன்'

சமீபத்தில் ஒரு கதைப் புஸ்தகம் படித்தேன். நடு நடுவே ஒரு சிறு குழந்தை பரிதாபமாக, ''அம்மா, இனிமேல் இருட்டின பிறகு வாய்க்காலுக்குப் போகலேம்மா'' என்று கதறும் சம்பவம் மனத்தை வாட்டி எடுத்தது. என் கதையும் அதேபோல்தான்.

''வேண்டாம் அப்பா, அவன் ஏழை என்பதற்காகத்தான் அப்பா, தந்தேன். இனிமேல் தரவில்லை அப்பா'' என்று பிதற்றிக் கொண்டிருந்தேனும் நான். அப்போது எனக்குக் கடுமையான விஷ ஜுரம். நான் இனிப் பிழைக்கமாட்டேன் என்று டாக்டர் கூறிவிட்டாராம். சோகமே உருவெடுத்த வண்ணம் அருகில் அமர்ந்திருந்தனர் என் தாயும் தந்தையும். ஜுரம் வந்து இரண்டு மூன்று நாள் ஆகியிருக்கும்போல் இருக்கிறது. பிரக்ஞை அற்றுக் கிடந்த நான் அன்றுதான் கண் விழித்துப் பார்த்திருக்கிறேன்.

ஈனஸ்வரத்தில், ''அம்மா!'' என்றேன். ''ஏண்டி கண்ணு. உனக்கு உடம்பை என்ன பண்ணுகிறது?'' என்று ஆவலுடன் கேட்டாள் அம்மா. பக்கத்தில் நின்ற அம்மாவைப் பார்த்ததும், பழைய படி முனக ஆரம்பித்தேன். ''அடிக்காதே அப்பா, என்னை. நாணுவுடன் இனிமேல் சேரவில்லை அப்பா'' என்றேன்.

அந்தச்சமயம் என் முகத்தில் இரு கண்ணீர்த் துளிகள் சூடாக விழுந்தன. கண் விழித்துப் பார்த்தேன். அப்பா தம் அழுகையை நிறுத்திக் கொண்டார். ''இந்தா, நான் அடிக்கவில்லையடா, ராஜா. என்னைப் பார். என்னைக் கண்டு பயப்படாதேடா, கண்ணு!'' என்று நாத் தழுதழுக்கக் கூறினார். அப்படீன்னா நாணு?'' என்று கேட்ட போது வாசல் கதவைத் திறந்து கொண்டு நாணுவே பாய்ந்து வந்தான். வந்து என் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டான். ''இந்து! இந்து!'' என்று பரிதாபமாக அழ ஆரம்பித்தான் அவன். எனக்கும் அழுகை வந்துவிட்டது. அப்பாதான் இருவரையும் தேற்றினார்.

* * *

ஆமாம், இந்த நாணுவின் அப்பா ரொம்ப ரொம்ப ஏழை. ஏதோ, கார்ப்பொரேஷன் இருக்கிறதே, அதில்தான் வேலையாக இருக்கிறார். மாதம் ஐம்பது ரூபாய் தான் சம்பளம். அதை வைத்துக் கொண்டு ஏழு பேரைக் காப்பாற்ற வேணும். காலையில் பழைய சோறு சாப்பிட்டுவிட்டு வருவான் நாணு. மத்தியான்னம் வீட்டிற்குப் போக மாட்டான். ''ஏண்டா?'' என்றால் ''எனக்கு அஜீர்ணம்டா'' என்பான். இல்லாவிட்டால் பையன்களின் கண்களில் படாமல் எங்கேயாவது போய்விட்டு மணி அடிக்கும் சமயத்தில் வகுப்பிற்கு வருவான். ஒரு சமயம் நடு வகுப்பிலேயே மயக்கம் போட்டு விழுந்து விட்டான் அவன். சம்பளம் கட்டவில்லை, புஸ்தகம் வாங்கவில்லை என்று எத்தனை தரம் வெளியே நின்றிருக்கிறான், நாணு! இவ்வளவுக்கும் அவன் புத்திசாலிப் பையன்.

எனக்கு அவன்மேல் ஓர் ஆசை. மற்றப் பையன்களெல்லாம் என்னைச் சதா சூழ்ந்துகொண்டிருப்பார்கள். எனக்கு அப்பா கொடுக்கும் நாலணாவில் தினம் தினம் பங்குக்கு வந்து விடுவார்கள். காசைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அவர்கள் என்னை விரட்டிக்கொண்டு வருவதைப்பற்றித் தான் வெறுப்பு. நாணு மட்டும் என்னை நெருங்கமாட்டான். ஏதாவது பாடத்தில் சந்தேகம் என்றால் அவனைத்தான் நான் கேட்பேன்.

ஒரு நாள் அவனைப் பார்த்து ''ஏண்டா நாணு, நீ என்னுடன் அதிகம் பழகுவதில்லே?'' என்றேன். அவன், ''எனக்கும் உன்னோடு பழகணும்னு ஆசையாயிருக்குடா, இந்தூ. ஆனால் வெட்கமாயிருக்கிறது. காசுக்காக உன்னைத் தொடர்ந்து அலேகிறேன் என்பார்கள் எல்லோரும்'' என்றான்.

உடனே நான், ''நாணு! எனக்கு நிச்சயம் கெட்ட கோபம் வரும். இந்த மாதிரி வித்தியாசமெல்லாம் யாரிடம் நினைக்கிறாய்?'' என்றேன். அதன் பிறகுதான் நாணு என்னோடு நெருங்கிப் பழகினான்.

எனக்கு அப்பா கொடுக்கும் காசைத் தினம் ஓர் உண்டியலில் போட்டு வைப்பேன். மாதக் கடைசியில் அதை எடுத்து மொத்தமாக எண்ணிப் பார்ப்பேன். நாணுவின் சம்பளத்தை அவனுக்குத் தெரியாமல் நானே கட்டிவிடுவேன். தெரிந்தாலும் அவனே அடக்கிவிடுவேன். ஒரு நாள் அப்பா என்னைக் கேட்டார், ''இந்தூ, காசை ஏன் சேர்த்து வைக்கிறாய்?'' என்று. நான் சமயோசிதமாக, ''எங்கள் வாத்தியார் 'சிக்கனம் சிறந்த பழக்கம்' என்றார். அதனால்தானப்பா'' என்று கூறிவிட்டேன். அதைத் தொடர்ந்து இரண்டாம் நாள் என் பையிலிருந்து நாராயணனின் சம்பள ரசிதை எடுத்துவிட்டார். இது எனக்குத் தெரியாது. உடனே என்னை, ''இந்தூ, இதுவரை ஐந்து மாசமா நீ சேர்த்த நாற்பது ரூபாயைக் கொண்டுவா'' என்றார். எனக்குத் 'திக்'கென்றது. என்ன செய்வேன். விழித்தேன். விஷயமறிந்த அப்பா என்னை அடித்துவிட்டார். ''ஏண்டா, உனக்காக நான் காசு கொடுக்கவாவது, நீ அதை ஊர்ப் பிச்சைக்கார நாய்களுக்குத் தானம் கொடுப்பதாவது! நான் இதற்காகவா தருகிறேன்? இனிமேல் நாணுவோ வாணுவோ அவனோடு சேரு, சொல்கிறேன்'' என்று அதட்டினார். பிறகு ஆசிரியர்கள், பையன்கள் முதலியவர்களிடம் நான் நாணுவுடன் சேராமல் பார்த்துக்கொள்ளும்படியும் கூறிவிட்டார். அப்படியும் நான் நாணுவுடன் சிநேகமாகத்தானிருந்தேன். நான் என்ன செய்வேன்? என்னால் அவனுடன் சேராமலிருக்க முடியவில்லே. அப்பாவிடம் எனக்கு அடிக்கடி அடி விழும்.

ஒரு சமயம் அப்பா ஒரு பத்திரிகைக்குக் கதை எழுதி அனுப்பினார். சின்னக் குழந்தைகள் கதைதான் அது. அதில், 'குழந்தைகள் புனிதமானவர்கள். களங்கமில்லாத மனம் உடையவர்கள். ஏழை, பணக்காரன், கீழ்ஜாதி, மேல்ஜாதி என்ற வித்தியாசமே அவர்களிடம் கிடையாது' என்று கூறியிருந்தார். அப்பா திருந்திவிட்டாராக்கும் என்று நான் எண்ணினேன்.

அன்று மாலே அம்மா என் சட்டைகளே ஓர் அழுக்குக் கூடையில் போட்டுக்கொண்டிருந்தாள். போனமாதந்தான் அந்தச் சட்டைதைத்திருந்தாள். ''ஏன் அம்மா, அதை நான் உபயோகிக்கலாமே இன்னும்!'' என்று கேட்டேன். ''சீ சீ, தோட்டிகூட அதைத் தீண்டமாட்டானே. ஏதாவது எவர்ஸில்வர் பாத்திரக்காரனிடம் போட்டால் பாத்திரங்களாவது வாங்கலாம்'' என்றாள். ''ஏன் அம்மா, நாராயணன் ஒரு வருஷமா அந்த ஒரே சட்டை, டிராயர்தானே போட்டுக்கொண்டிருக்கிறான். அவனிடம் இந்தப் புதுச் சட்டைகளில் ஏதாவது ஒன்று கொடுத்துவிடலாமே'' என்றேன். ''நம் வீட்டில்தான் வேண்டிய பாத்திரம் இருக்கிறதே....'' என்று நான் தொடர்வதற்குள் அம்மாவுக்குக் கோபம் வந்துவிட்டது. ''ஏதாவது தொட்டு கிட்டுச் செய்தாயோ, தொலேத்து விடுவேன்'' என்று கடிந்தாள்.

மறுநாள் இரு சட்டைகளேயும் டிராயர்களேயும் காணேம். மாலேயில் அப்பாவிடம் கோள் மூட்டிவிட்டாள் அம்மா. ''இனிமேல் நாணுவுடன் சேருவாயா, சேருவாயா?'' என்று அப்பா வெளுத்துவிட்டார் என்னே. நான் ஆத்திரத்துடன், ''நீங்கள்தானே அப்பா, புஸ்தகத்தில் எழுதியிருக்கிறீர்கள்?'' என்றேன். ''மூளேச்சு மூணு

இலேகூட விடவில்லை. பேச்சைப் பார், பேச்சை'' என்று அப்பா நன்ருக அடித்துவிட்டார். அன்று இரவிலிருந்துதான் எனக்கு ஜுரம்.

* * *

சீக்கிரம் எனக்கு ஜுரம் தேவலையாகியது. அன்றிருந்த அப்பாவா இவர் என்று கூறும்படி முழுவதும் மாறிவிடவில்லை. என்ருலும் மறுபடியும் பையனுக்கு ஜுரம் வந்துவிடப்போகிறதே என்று என் விஷயத்தில் தலையிட முடியவில்லை. ஆனல் மறைமுகமாக நாராயணனை வெறுத்தார். நான் வீட்டில் இல்லாத சமயத்தில் நாணு வந்தால் அலட்சியப்படுத்தி அனுப்பிவிடுவார். அல்லது 'அதிகமாக இந்துவுடன் பழகாதே' என்று எச்சரித்து அனுப்பிவிடுவார். ஆனல் நாராயணன் இதைப்பற்றி ஒருவார்த்தை என்னிடம் பேசுவதில்லை. வழக்கம் போல் வருவான், போவான். அப்பாவும் எப்போதாவது மட்டமான துணியில் இரண்டு மூன்று கெஜம் வாங்கி அவனுக்குக் கொடுப்பார். அவ்வளவு பெரிய மனிதரை அலட்சியப்படுத்தக்கூடாதே என்று நாராயணன் அந்தத் துணிகளை ஏற்றுக்கொள்வான். அம்மாதான் அவனிடம் அதிகமாகப் பரிவு காட்டி வந்தாள்.

இந்த வருஷத்தில் நன்னடத்தைப் பரிசு யாருக்குத் தெரியுமா? எனக்குத்தான். ஆனல் மற்ற எல்லாப் பரிசுகளும் நாராயணனுக்கே கிடைத்தன. பரிசு ஒன்றுமே இல்லாமல் போகிறதே என்று என் அப்பா தாட்சிண்யத்துக்காகத் தலைமை உபாத்தியாயர் எனக்கு மேற்படி பரிசைக் கொடுத்தார். உண்மையில் நாராயணனுக்கே அதுவும் போகவேண்டியது. அப்பா, ''நாராயணன் கெட்ட பயல்'' என்று அடிக்கடி கூறுவது வழக்கம். எனக்கு இது பொறுக்காது. ஆனலும் பேசாமல் போய்விடுவேன். தினம் சாயங்காலம் நானும் நாராயணனும் கோஷ்டி சேர்த்துக்கொண்டு காவேரிக்கரையில் 'சடுகுடு' விளையாடுவோம். எனக்குக் கிரிக்கெட், ரிங் டென்னிஸ் எல்லாம் தெரியும். ஆனல் வெளிநாட்டு விளையாட்டே எனக்குப் பிடிக்காதே. வீட்டில் இருக்கும் போது பாண்டி, சொக்கட்டான் ஆடினலும் விளையாடுவேனே தவிர, 'கேரம் போர்டை' நினைக்கவும் மாட்டேன்.

நெற்றியில் சுருள் சுருளாக மயிர் புரள அழகான தோற்றத்துடன் இருப்பான் நாராயணன். நாலடி உயரமிருப்பான். முகம் பளபளவென்று மஞ்சளாக, அழகாக இருக்கும். ஒரு வசீகர சக்தி அவனிடம் உண்டு. பச்சைக் குழந்தை முதல் பெரியவர்கள் வரை எல்லாருக்கும் அவனிடம் ஒரு விசேஷப் பிரியம் உண்டு. பேச்சில் வெகு கெட்டிக்காரன். எப்பொழுதும் நல்ல பேச்சையே பேசுவான். நல்ல சகவாசமே கொள்வான். இப்படிப்பட்டவனை அப்பா ஏன் வெறுக்கி

ரூர்? நல்லதுக்கே இது கால மில்லேயோ?

நாணு இன்றி என்னல் ஒரு கண மும் சந்தோஷமாக இருக்க முடி யாதுதான். தசரா விடுமுறை தொடங்கிவிட்டது. காவிரியில் ஜலம் நிறையச் சென்றது. நானும் நாணுவும் நன்ருக நீந்துவோம். அன்று வெள்ளிக்கிழமை. அம்மா விடம் கூறிவிட்டு நாணுவுடன் காவேரிக்குச் சென்றேன். அடர்ந்த தோப்பு. அருகில் கண்ணபிரான் படித்துறை. அதன் முடிவில் நடுக் காவேரி வரை சென்றுள்ள கருங் கல் வாகனே ஒன்று. எங்கள் திருச்சிக் காவேரியின் அகலம் என்ன தெரியுமா? சென்னே கூவம் நதியைப்போல் அரையே அரைக்கால் அங்குலம் இல்லே. சரி யாக அரை மைலாக்கும்! சுழல்கள் குதித்துக் குதித்துக் குமிழியிட்டுப் பாயும். ஆடிப் பதினெட்டன்று பார்க்கவேண்டும். ஒரு சமயம் புது வெள்ளம் வேடிக்கை பார்ப்பதற் காகக் கரையிலிருந்து ஐந்தடி தூரத்தில் ரோட்டில் நின்றுகொண் டிருந்தேன். வீடு திரும்பி வந்த தும், ''ஏண்டா குளித்தாயா, எருமை மாடே?'' என்று எனக்கு அடி விழுந்தது. காவிரியின் அலே களின் உயரத்தை விவரிக்கவேண் டுமா? சிவப்பும் வெள்ளேயுமாகக் காட்சியளிக்கும் புது வெள்ளத்தில் காவேரிக்கரைப் பிள்ளேயார் கோவிலே ஒரு சமயம் முழுகத் தெரிந்தது. கருங்கல் வாகனேயில் ஒரு வில்வமரம். அதன் உச்சியில் நாங்கள் ஏறி, காவேரியில் குதிப் பது வழக்கம். அன்று இரண்டு மணி இருக்கும். நல்ல வெயில். தூரத்தில் ஏதோ வாழைக் கட்டை மிதந்து வருவது தெரிந் தது. ''நான் அதன்மேல் சவாரி செய்யப்போகிறேன், இந்தா!'' என்று கூறினன் நாணு. ஆம். அந்த வாழை மரத்தில் ஏ..றி..ன..ன்.

ஐயோ! இது என்ன. ஒரு பெரும் சுழலில் மூழ்கிவிட்டான் அவன். ''ஐயோ, நாணு! என் அருமை நாணு!'' என்று கத்தி னேன். நானும் உடனே அதே இடத்திலிருந்து குதித்தேன். பய னில்லே. சுழல் என்னேக் கைவிட்டு, என் நண்பனே எடுத்துக்கொண் டது. ''ஏ, பாரபட்சமுள்ள சுழலே!'' என்று கதறினேன். இருந் தும் என்ன? வீட்டிலிருந்து உயிரு டன் வந்த நாணுவின் உடல் உயிரற்றுக் கரையில் போடப்பட் டது. ''நாணு, என்னல் உனக்குச் சாவுடா'' என்று கதறு கதறென்று கதறினேன். ''சுவாமீ! என் உசிரை வேண்டுமானலும் எடுத் துக்கொண்டு என் நண்பனுடைய உசிரை விட்டு விடுங்களேன்'' என்று அழுதேன்.

என் தந்தைகூட நாணுவின் முடிவைக் கண்டு 'ஹோ''வென்று கதறினர்.

என் நண்பனின் உடம்பு மறைந்துவிட்டது. அன்று முதல் எனக்கு ஏக்கம் பிடித்துவிட்டது. பைத்தியம் பிடித்தவன்போல் அடிக்கடி நாராயணன் வீட்டிற்குச் செல்வேன். அங்கே அவன் சட்டை டிராயர்களேப் பார்ப்பேன். துக்கம் பொங்கிக்கொண்டு வரும்.

''நாணு! நாணு!'' என்று கதறிக் கொண்டிருப்பேன். நாணு உபயோ கித்த பேனவை வைத்துக்கொண்டு அழுவேன். சுருட்டை மயிரோடு களே பொருந்திய அவன் முகத்தை நினேத்த மாத்திரத்தில் அழுகை அதிகமாகும். உணவு சரியாக உட் செல்லவில்லே. அடிக்கடி கண்ண பிரான் படித்துறையில் வெகு நேரம் உட்கார்ந்திருப்பேன். அடிக் கடி நாகுத்தோப்பிலுள்ள பயங்கர மான மரங்களேப் பார்ப்பேன். பயமும் துக்கமும் பீரிட்டுக் கொண்டு வரும். வாய் விட்டு அழுவேன். யாரோ சொன்னர்கள். துர்மரணம் அடைந்தவர்கள் பிசாசாக மாறுவார்கள் என்று. ''நாணு, நீ பிசாசாகவா மாறியிருக் கிருய்?'' என்பேன்.

அப்பா தீர்மானித்தார். நெடுந் தொலேவில் உள்ள நீலகிரிக்குச் செல்வோம் என்று. அடுத்த வாரம் நீலகிரிக்குச் செல்லவேண்டும். என் நண்பன் பிறந்த, மாண்ட பூமியை விட்டு நான் அகல விரும்பவில்லே. அகன்ருல் என் துயரம் அதிக மாகுமே ஒழிய, குறையாது.

நெடுநேரம் வரை அந்த வில்வ மரத்தை உற்று நோக்கிக்கொண் டிருந்தேன். அந்த இரு வில்வப் பழங்களும் திடீரென ஜொலிக்க ஆரம்பித்தன. நாணுவின் கண் களா அவை? ''இந்து! இந்து! அழாதே!'' என்ற மாயக் குரல் கேட்டது.

''என்னைத் தவிக்க விட்டுச் சென்றதற்கு சந்தோஷமா படச் சொல்கிருய்?''

''இல்லை. உன் துயரம் நொடியில் தீரப்போகிறது. கவலைப்படாதே.''

''நிஜமாகவா?'' என்று கேட் டேன்.

''ஆம். உனக்குப் பணம், தந்தை, தாய், இளம் வயது யாவற் றையும்விட நண்பனே வேண்டு மென்ருல் நான் குதித்த அதே இடத்திலிருந்து குதி. நான் சுழ லாக வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன்'' என்றது அந்தக் குரல்.

மறுவினாடி ஆற்றின் நடுவில் பாய்ந்தேன். கண்கள் குத்த ஆரம் பித்தன. வாயிலும் மூக்கிலும் ஏராளமான தண்ணீர் ஏறியது. மூச்சுத் திணறியது. ''ஆகா! நண்பா, வந்துவிட்டாயா?'' என்று கோஷித்தேன்.

ஆமாம்; எல்லாம் கனவு மயக்கத் தில்தான்! இருந்தால் என்ன? நண்பனை மீண்டும் நான் பார்த்து விட்டேன். நம்முடைய வாழ்க் கையே ஒரு கனவுதானே?

கன்றுக்குட்டி

எ. ந. கணபதி

கண்ணன் வீட்டுக் காராம்பசு
கன்று போட்டதாம் - அதன்
கண்ணைப் பறிக்கும் வெள்ளை நிறம்
கொள்ளை அழகாம்.

பட்டுப் போலச் சின்ன உடம்பு
பள பளக்குதாம் - லேசாய்த்
தொட்டுப் பார்க்கக் கிட்டப் போனால்
முட்ட வருகுதாம்.

புள்ளி மானைப்போலக் கன்று
துள்ளிக் குதிக்குதாம் - சிறு
பள்ளிச் சிறுவன் போலத் தெருவில்
பாய்ந்து ஓடுதாம்.

ஆசை யோடு அம்மா வென்று
தாயை அழைக்குதாம் - அந்த
ஓசை கேட்டுக் காராம்பசு
ஓடி வருகுதாம்.

அம்மாப் பசு ஆசை யோடு
நக்கிக் கொடுக்குதாம் - வெகு
கொம்மாள மாய்க் கன்றுக்குட்டி
பாலைக் குடிக்குதாம்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(N) 445. நடராஜன், S., புதுக்கோட்டை. 446. நாராயணன், R. S., புனு. 447. நாராயணன், S., தேவகோட்டை. 448. நாராயணன், N.. மேட்டூர் அணை. 449. நடராஜன், K., சிங்கப்பூர். 450. நாராயணன், V., தெப்பக்குளம். 451. நீலா, R.. சுங்கைப் பட்டையா. 452. நிர்மலா, G., சென்னை-4. 453. நரசிம்மன், K. S., திருவாரூர். 454. நாராயணன், R., சென்னை-4. 456. நமசிவாயம், S., சாவகச்சேரி. 457. நரசிம்மன், புதுடில்லி. 458. நாகநாதன், P. S., மேட்டூர் அணை. 459. நரசிம்மன், K. L., மதுரை. 460. நரசிம்மன், N. S., கோவில்பட்டி. 461. நெல்லையப்பன், C.. மதுரை. 462. நாராயணன் S. R., புனு-2. 463. நடராஜன், M., பழனி. 464. நாராயணன், N., மேட்டூர் அணை. 465. நடராஜன், C., கும்பகோணம். 466. நடேசன், T. K., சென்னை. 467. நடராஜன், N.. சென்னிமலை. 468. நடராஜன், C. V., சென்னை 4. 469. நாதன், A. P., திருவனந்தபுரம். 470. நடராஜன், S., புதுக்கோட்டை. 471. நமசிவாயம், S., திருநெல்வேலி டவுன். 472. நந்தகுமார், (விலாசம் எழுதவில்லை) 474. நடராஜன், R. K., சென்னை-5. 475. நிர்மல குமார், உதகமண்டலம். 476. நாதன், P. K. V., கல்கத்தா. 477. நரசிம்மன், S., சென்னை-4. 478. நரேந்திரநாதன், A., யாழ்ப்பாணம். 479. நாதன், P. R., கள்ளக்குறிச்சி. 480. நந்தகோபால், புரசைவாக்கம். 481. நாகநாதன், V. P., உடுமலைப்பேட்டை. 482. நடராஜன், S., புதுக்கோட்டை. 483. நித்யநாதன், V., நாகப்பட்டணம். 484. நாச்சியப்பன், S.. சென்னை-21. 485. நரசிம்மன், G., சென்னை 2. 486. நாராயணன், V. L.. புதுக்கோட்டை. 487. நீலகண்டன், S., நாகர்கோயில். 489. நீலகண்டன், G., சென்னை-4. 490. நரசிம்மன், M. S., சேலம். 491. நாராயணசாமி, R., சென்னை-1. 492. நாகராஜன், B. V., சென்னை-1. 493. நமசிவாயம், A., சைதாப்பேட்டை சென்னை. 494. நாகராஜன், M. S. M., கொழும்பு. 495. நாகராஜன், V., கும்பகோணம். 496. நரசிம்மன் சென்னை-2. 497. நந்தகோபால், T., மண்ணடி, சென்னை. 498. நாராயணன் V., கோனுப்பட்டு. 499. நாராயணசாமி, S., சென்னை-16. 500. நாராயணன், V., திருச்சிராப்பள்ளி.

(P) 451. பரிமளம், C.N.A., (விலாசம் இல்லை) 452. பார்த்தசாரதி, V., சென்னை-4. 453. புருஷோத்தமன், A.R.M., கும்பகோணம். 454. பழனியப்பன் V.S., கோயம்புத்தூர். 455. பிரேமா.

இங்கே கத்தரிக்கவும்

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..............................

(தேதி, மாதம், வருஷம்)

மே, 15-'56 கூபன் நெ.

P., லால்குடி. 456. பத்மா, M.S,. திருப்பத்தூர், (வ.ஆ.) 457. பார்வதி, P.S., கோயம்புத்தூர், 458. பொன்னுசாமி, R., எண்ண மங்கலம். 459. பத்மநாபன், S., சென்னை-2. 460. பத்மநாபன், K., விழுப்புரம். 461. பரமசிவம், A., யாழ்ப்பாணம். 462. பிரான்ஸஸ் S., ஆரணி. 463. பழனியப்பன், R.M., சிதம்பரம். 464. பொன்னுதுரை, சிலோன். 465. பெருமாள், N., தாம்பரம். 466. பொன்னுசாமி, P., பண்டுலோயா. 467. பஞ்சாட்சரம், K., சென்னை-4. 468. பழனிச்சாமி, S., தேவனூர். 469. பிரபாவதி, K., கல்கத்தா-29, 470. பிரேமா V., சென்னை-1. 471. பிச்சு, K.A., குமாரலிங்கம். 472. பிச்சை இப்ராகிம், A., மகிபாலன்பட்டி, 473. பார்த்தசாரதி, H., பவானி. 474. பட்டாபிராமன், K., சென்னை-17. 479. பத்மா, R., சென்னை-5. 480. பத்மநாபன், A., செங்கோட்டை.

★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள்

மூன்று கூபன்கள் சேர்த்து

அனுப்பவேண்டும்.

பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★

481. பத்மாவதி, P., நெல்லிப்பளை. 482, பேரின்பராஜ், இடயாங்குடி. 483. பாண்டுரங்கன், S., சென்னை-4 484. பஞ்சாட்சரம், V.S., யாழ்ப்பாணம். 485. பிரேமஹரன், T.A., சேலம். 486. பத்மா, N., கல்கத்தா. 487. பங்கஜம், P.K., சென்னை-5. 488. பிரகல்லாதன், P.E.R., கடலூர் N.T. 489. புருஷோத்தமதாஸ், (விலாசம் இல்லை) 490. பழனிச்சாமி, S.M., ங்ககிரிதுர்க்கம். 491. பிரேமா, S., கோயம்புத்தூர். 492. பரமசிவம், A.V., திருவள்ளூர். 493. பத்மா, R., தஞ்சாவூர். 494. பெருமாள், P.M., சென்னை-21. 495. பிரேமா, தல்லாகுளம். 496. பிரபாகர், யாழ்ப்பாணம். 497. பத்மா, V., சென்னை-5 498. பட்டு, P.R., சென்னை-14. 499. பத்மநாபன், A.S., தூத்துக்குடி. 500. பழனியப்பன், K., சேலம். 501. பழனியப்பன், L., சுங்கைப் பட்டணம். 502. பிச்சுமணி, K., மதுரை. 503. பரமானந்தம், S.M., வாலாஜாபாத். 504. பத்மநாபன், K.L., திருச்சி கண்டோன்மெண்ட். 505. பத்மநாபன், S.V., கோயம்புத்தூர். 506. பத்மாவதி, S., ஆனையம்பட்டி. 507. பத்மநாபன், V., சென்னை-1. 508. பிரேமா, R., சுவாமிநகர், மதுரை. 509. பத்மநாபன், K., பழனி. 510. பொன்னுசாமி, S., திருப்பூர். 511. பார்த்தசாரதி, P., குடியாத்தம். 512. பத்மநாபன், P., கூனூர். 513. பத்மாவதி, M.A., சென்னை-4. 514. பாண்டுரங்கன், N., வளவனூர். 515. பெருமாள், M., கொழும்பு. 516. பரமேசுவரன், P.S., பம்பாய்-19. 517. பரமேசுவரன், A.S., லால்குடி. 518. பெருமாள், A., இலங்கை. 519. பிரேமா, பிரபா, ரமேஷ், கொள்ளேகாலம். 520. பார்த்தசாரதி, K.G., ராகவன், K.G., கிருஷ்ணன், K.G., சென்னை-4. 521. பரமசிவம். G., சென்னை-5. 522. பார்த்தசாரதி, R., சென்னை. 523. பழனிவேலு, S., திருக்காட்டுப்பள்ளி. 524. பிரபாகரன், Y.N., சேலம்.

(மீதி அடுத்த இதழில்)



சபாஷ் கந்தன்!

'பூரம்'

கள்ளப்பயல் கந்தனைத் தெரியாதவர்கள் அந்தப் பிராந்தியத்திலேயே கிடையாது. அவனுக்கு வயது பத்துதான் ஆகியிருந்தது. என்றாலும் பக்காத் திருடன், கஜத் திருடன் எல்லோரும் அவனிடம் பிச்சை வாங்கவேண்டும். அவ்வளவு கெட்டிக்காரன். அவன் திருடும் விதமே அலாதி. தனக்குத் தேவை எவ்வளவோ அதற்குமேல் அவன் ஒரு நாளும் திருடியதில்லை.

அவனைப்பற்றிப் பலர் பலவிதமாகக் கதைகள் கூறினார்கள். அவன் ஓர் அநாதை என்று சிலருடைய அபிப்பிராயம். சிலர் அவன், போலீஸாரால் கைதாக்கப்பட்ட கஜத்திருடன் முனியாண்டித் தேவனின் மகன் என்று சொன்னார்கள். அவனைப்பற்றி நிச்சயமாகச் சொல்லக்கூடியவர்கள் அந்த வட்டாரத்திலேயே கிடையாது.

போலீஸார் பலவிதமாக முயற்சி செய்து பார்த்தார்கள். எல்லோரையும் காட்டிலும் கான்ஸ்டேபிள் பொன்னுரங்கம்தான் 'பிரமோஷன்' ஆசையில் தீவிரமாக முயற்சி செய்தார். தினமும் இரவு வேளைகளில் காட்டுப்பக்கம் பத்துப் பதினைந்து போலீஸ்காரர்களுடன் 'ரோந்து' சுற்றினார்.

பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படாமலா போவான்?

ஒரு நாள் இரவு காட்டில் கந்தன் ஏழெட்டுப் போலீஸ்காரர்களுக்கு மத்தியில் சிக்கிக்கொண்டு விட்டான். நான்கு புறத்திலிருந்தும் போலீஸ்காரர்களின் காலடிச் சத்தமும் 'விசில்' சத்தமும் நெருங்கி வந்துகொண்டிருந்தது.

கந்தன் ஒரு நிமிஷம் யோசித்தான். ''சரிதான்! இந்தத் தடவை மாட்டிக்கொண்டோம்' என்று நினைத்துவிட்டான். திடீரென்று அவனுக்கு யோசனை தோன்றியது! ஒரு பர்லாங் தூரத்தில் ஒரு சின்ன ஓட்டுவீடு கண்ணில் பட்டது. செடிகளின் மறைவில் டார்ச்சு விளக்குகளின் வெளிச்சத்தில் படாமல் தலை தெறிக்க அந்த வீட்டை நோக்கி ஓடினான். நல்ல

வேளை! அதுவரை. போலீஸின் கண்களில் அவன் படவில்லை. 'காம்பவுண்டு' சுவர் ஓரமாகவே ஓடிச்சென்று வீட்டின் கொல்லைப்புறத்தை அடைந்தான். அங்கிருந்து ஒரே தாவில் ஓட்டின் மீது ஏறினன். எல்லாம் ஒரே நிமிஷத்தில் நடந்துவிட்டது! ஓசைப்படாமல் ஓட்டின்மேல் நடந்து வீட்டின் முற்றத்துக்குள் குதித்தான்.

முற்றத்துக்கு எதிர்ப்புறத்தில் ஒரு சிறுவன் - கிட்டத்தட்ட அவன் வயதுதான் இருக்கும் - ஒரு விளக்கடியில் படித்துக்கொண் டிருந்தான். கந்தன் வந்து குதித்ததும் அவன் தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு எழுந்திருந்தான். பயத்தால் கால்கள் நடுக்கம் கண்டன. வாயைத் திறந்து திறந்து மூடினனே தவிர, பயத்தினுல் வார்த்தைகள் வெளிவரவில்லை. கந்தன் தன் வாயில் விரலை வைத்து மூடி, 'சத்தம் போடாதே!' என்று சமிக்ஞை செய்தான். போலீஸ்காரர் ஒருவரின் 'பூட்ஸ்' சப்தம் மட்டும் அருகில் நெருங்கி வந்துகொண்டிருந்தது.

கந்தன் மறுகணம் அந்தப் பையனின் காலடியில் விழுந்தான். ''தம்பி! தம்பி! என்னைக் காப்பாற்று;..போலீஸ்!..போலீஸ்!.. தம்பி! கொஞ்சம் தயவு செய்து..'' என்று கெஞ்சினன்.

"நீ யாரு?..நீ..ஏன்..இப்படிப் போலீசுக்குப் பயப்படறே!'' என்று தட்டுத் தடுமாறிக்கொண்டே கேட்டான் அந்தத் தம்பி.

''நான்தான் கந்தன். நீகூடக் கேள்விப்பட் டிருப்பாயே! என்னைப் போலீஸார் துரத்துகிருர்கள். எக்கச்சக்கமாக மாட்டிக்கொண்டு விட்டேன்! தம்பி!..சீக்கிரம்!.. உனக்கு ரொம்பப் புண்ணியம்.. காட்டிக் கொடுக்காதே! தம்பி!.. அதோ!..அதோ!..'' பரபரப்புடன் சொன்னுன் கந்தன்.

''நீதானே கள்ளப்பயல் கந்தன்! நீ திருடன்தானே?''—கேட்டான் அந்தத் தம்பி.

''தம்பி!..பெரிய பணக்காரர்களுக்குத்தான் நான் திருடன். ஏழைகளுக்கெல்லாம் நான் நல்லவன்தான்!''

''அப்போ உன்னை ஏன் போலீஸ்காரங்க துரத்தருங்க?''

''அதையெல்லாம் அப்புறம் சொல்கிறேனே, தம்பி! அதோ வந்திட்டாங்க! சீக்கிரம்! ஒரு இடத்தில் நான் ஒளிந்துகொள்கிறேன்!''—கந்தன் அவசரப்பட்டான். ''உன்னைப் பார்த்தால் நல்லவன் மாதிரிதான் தோணுகிறது. அப்போ ஒண்ணு செய்'' என்று கூறிய அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. 'சடக்'கென்று கந்தனின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனுன் அவன். மூலையில் ஒரு பெரிய பெட்டி இருந்தது. அதற்குள் அவனைப் படுக்க வைத்தான். மூடியால் பெட்டியை மூடிவிட்டான்.

அறைக் கதவை யாரோ தட்டினர்கள். அந்தத் தம்பிதான் போய், கதவைத் திறந்திருக்க வேண்டும். உள்ளே யாரோ வந்தார்கள். போலீஸ்காரன்தான். கந்தனுக்குத் 'திக்' 'திக்' கென்று அடித்துக்கொண்டது. வந்தவர் 'அப்பாடி' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே உள்ளே வந்தார். கந்தன் பெட்டிக்குள்ளிருந்தபடியே அவர்கள் பேசுவதைக் கவனித்துக் கேட்டான்.

''தம்பி, கொஞ்சம் தண்ணீர் கொடு!''—இது வந்தவரின் குரல்.

''ஏம்பா! இம்புட்டு நாழி இன்னிக்கி; ரொம்பக் களைச்சிருக்கியே!''—அந்தத் தம்பிதான் கேட்டான்.

அதற்குள் வீட்டின் மறுபுறத்திலிருந்து யாரோ வந்தார்கள்.

''ஏன் இம்புட்டு நாழி இன்னிக்கி?''—இது புதிதான குரலாக இருந்தது.

'அதை ஏன் கேட்கறே! இன்னிக்கி அந்தப் பையன் நம்மகிட்ட வகையா மாட்டிக்கிட்டான். அதுக்குள்ளே எங்கேயோ ஓடி மறைஞ்சுட்டானே!..அந்தப் பயலுக்கு இருக்கிற சாமர்த்தியம் என்னங்கறே! நரிக்குட்டிமாதிரி ஓடிப் போயிடுருன்!..''

இது கான்ஸ்டபிள் பொன்னுரங்கத்தின் குரல்தான் என்

கந்தனுக்கு நன்றாகத் தெரிந்து விட்டது.. அட பாவி!

''அது யாரு, அந்தப் பையன்?.. அதென்னமோ கந்தனுமாச்சு!.. கிந்தனுமாச்சு!.. என்னிக்கித்தான் உங்களுக்கு வேலையிலே உயர்வு கிடைக்கப் போகுதோ!.. என்னிக்கித்தான் கஷ்டப்படாமெ, கவலை யில்லாமெ இருக்கப் போறோமோ!.. எனக்குந்தான் ரொம்ப நாளா ஆசை.. நம்ம 'வசு' வுக்கு ஒரு நல்ல தோடு வாங்கிப் போடணுமின்னு!'' இது பொன்னு ரங்கத்தின் மனைவியாக இருக்க வேண்டும்.

''இந்தா, அந்தக் கந்தனைப் பிடிச்சுட்டேனா, நான்தான் அப்புறம் ராஜா!.. 'பிரமோஷன்' கிடைக்கும்; சம்பளமும் அதிகம் வரும். இன்னிக்கி எப்படியானும் அவனைப் பிடிச்சுடலாம்னு தான் பார்த்தேன்.''

''ஏம்பா!.. அவனை நீ பிடிச்சுக் கொடுத்தா, உனக்குச் சம்பள உயர்வா?.. அட!''—இது தம்பி.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கந்தனுக்குக் 'குபீர்' என்று பயம் வந்தது. 'ஐயையோ! தம்பி மோசம் செய்யப் போகிறானா? கடைசியிலே இங்

கேயா வந்து மாட்டிக்கொள்ளனும்! அந்தத் தம்பி ரொம்ப கெட்டிக்காரத்தனமாத்தான் வேலே செஞ்சிருக்கான். ஏமாந்து விட்டேனே!' கந்தன் தவித்தான்.

''என்னிக்கானும் அவன் அகப்படாமல் போகப்போறதில்லே. பார்த்துடறேன் ஒரு கை! ஒரு வருஷமா என்னே ஏமாத்தருனே அந்தப் பயல்!..'' இது பொன்னுரங்கம்.

அரைமணி நேரத்திற்குப்பின் எல்லோரும் தூங்கிவிட்டார்கள் என்பதை நிச்சப்தம் தெரிவித்தது. பொன்னுரங்கம் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தார். அந்த முருகனும்—அதுதான் அந்தத் தம்பியின் பெயர்—நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்தான்.

ஓசைப்படாமல் பெட்டியின் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான் கந்தன். தனக்குச் சமயத்தில் உதவி செய்த அந்தத் தம்பிக்குப் பெரிய கும்பிடு போட்டான். கிளம்பிப் போய் விட்டான்.

* * *

நான்கு நாட்களுக்குப்பின் ஒரு நாள் வாசலில் திமிலோகப் பட்டது. 'கந்தன் பிடிபட்டு விட்டான்' என்று அறை குறையாக முருகனின் காதில் விழுந்தது. முருகனுக்குத் 'திக்' கென்றது.

''ஐயோ பாவம்! அகப்பட்டுக் கொண்டானே!'' என்று ஏனே அவன் மனம் இரங்கியது.

பொன்னுரங்கம்தான் கடைசியில் கந்தனேப் பிடித்துக்கொடுத்திருந்தார். முருகனுக்கு இந்த விஷயம் தெரியவந்தபொழுது அவன் சந்தோஷப்படவில்லே. எல்லோருக்குமே அது பெரும் புதிராகத்தான் இருந்தது. பொன்னுரங்கம் மட்டும் சந்தோஷ மிகுதியால் தலே கால் தெரியாமல் குதித்தார். சப் இன்ஸ்பெக்டர் உள்பட எல்லோரும், பல நாளாக அகப்படாமல் இருந்த சிறுவன் கந்தனேப் பிடித்ததற்காகப் பொன்னுரகத்தைப் பாராட்டினர்கள்.

பொன்னுரங்கத்துக்கு வெகு சீக்கிரத்தில் ஹெட்கான்ஸ்டேபிளாகப் பிரமோஷன் கிடைத்துவிட்டது. அன்று அவர் தம் மனேவியிடம் சொல்லிக்கொண்ட பெருமைக்கு எல்லேயே கிடையாது. அவளுக்கு மிகவும் ஆனந்தம். அவளுடைய தரித்திர நிலேமை மாறிவிட்டதல்லவா! எல்லாவற்றிலும் இதனல் துக்கமடைந்தவன் முருகன்தான்! முருகனுக்கு ஒரு புறம் சந்தோஷந்தான். அப்பாவுக்குப் பதவி உயர்வு கிடைத்திருக்கிறதல்லவா! ஆனலும் அவனுடைய அடிமனம் துயரத்தில் தோய்ந்திருந்தது. ''பாவம் கந்தன்! அவனேப் போலீஸில் என்னவெல்லாம் செய்கிருர்களோ?'' என்று இரக்கப்பட்டான்.

பத்து நாட்களுக்குப்பின் ஒரு நாள் எல்லோரையும் திடுக்கிடச் செய்தது, ஒரு செய்தி! ''சிறுவன் கந்தன் சிறையிலிருந்து தப்பி விட்டான்!'' முருகனின் மனம் துள்ளிக் குதித்தது. என்னவோ பெரிய பாரத்தைத் தன் மனத்திலிருந்து இறக்கி வைத்ததுபோல் இருந்தது அவனுக்கு.

அன்று மாலே ஆறு மணி இருக்கும். தற்செயலாக வீட்டின் கொல்லேப்புறம் சென்ற அவனுடைய காலடிகளில் ஒரு கடிதம் வந்து விழுந்தது. கடிதத்தைப் பிரித்து அவசரமாகப் படித்தான்.

''அன்புள்ள தம்பிக்கு,

நீ அன்று எனக்குச் செய்த உதவிக்கு மிகுந்த நன்றி! நீங்கள் எல்லோரும் அன்றிரவு பேசிக்கொண்டிருந்ததெல்லாம் காதில் விழுந்தது. உன் தாயாரின் விருப்பப்படியே உன் அப்பாவுக்குப் பதவி உயர்வு கிடைக்கும்படி செய்துவிட்டேன். நீ எனக்குச் செய்த உதவிக்கு என்னுடைய பிரதி உபகாரம் அதுதான். வேண்டுமென்றேதான், நான் உன் அப்பாவின் கையில் பிடிபட்டேன். இனிமேல் உன் அப்பாவின் வேலேக்கு ஓர் இடைஞ்சலும் வராது. கவலேப்படாதே! உனக்கு என்னுலான சிறிய உதவி இதுதான்.

உன் அன்புள்ள அண்ணன்,
கந்தன்.''

கடிதத்தைப் படித்த முருகன், 'சபாஷ் கந்தன்' என்ருன்.

இழந்த பொருள்

பி. கே. சாமி

விரைந்து சென்றுகொண்டிருந்த ரெயிலின் ஓட்டம் திடீரென்று தடைப்பட்டது. பிரேக் போடுவதால் ஏற்பட்ட 'கிரீச்' என்னும் நீண்ட ஒலி காதைப் பிளந்துவிடும்போல் ஒலித்தது. 'இப்படி நடுக் காட்டிலே திடீரென்று நிற்பானேன்?' என்று வியப்படைந்த பிரயாணிகள் பலர் பரபரப்புடன் என்ன விஷயம் என்று அறிவதற்காக வெளியே எட்டிப் பார்த்தார்கள். அந்த வண்டித் தொடரின் எந்த மூலையில் இருந்தோ ஒரு கெட்டிக்காரன், ''ஓர் ஆசாமி, ரெயிலின் கீழ் அறைபட்டு இறந்து விட்டானாம்' என்ற வதந்தி ஒன்றைப் பறக்கவிட்டான். அந்தச் செய்தி அங்கிருந்து ஜன்னலுக்கு ஜன்னல், பெட்டிக்குப் பெட்டி தாவி, நிமிஷ நேரத்தில் அத்தனை பிரயாணிகள் காதுகளுக்கும் எட்டிவிட்டது. அதன் பயனாக, ஏற்கனவே சொன்னபடி ஒவ்வொருவரும் முண்டியடித்துக் கொண்டு ஜன்னல் வழியாகக் கழுத்தை நீட்டிப் பார்த்ததுடன் ஒரு சிலர் கதவைத் திறந்து கொண்டு கீழேயும் இறங்கத் தலைப் பட்டார்கள். இந்தக் களேபரத்தில், குறிப்பிட்ட ஒரு பெட்டியில் என்ன நடந்தது என்று பார்ப்போம்,

எல்லோருடைய கவனமும் வெளியே வேடிக்கை பார்ப்பதில் நிலைத்துவிடவே, காளிமுத்து என்ற வாலிபன் காலியாகக் கிடந்த பெஞ்சுகளின்மீது பார்வையைச் செலுத்தினான். என்ன ஆச்சரியம்; சற்றுமுன் நாலைந்து பெண்கள் ஆக்கிரமித்துக்கொண்டிருந்த இடத்தில், இப்பொழுது ஒரு பெரிய 'ஜடைபில்லை' கவனிப்பாரற்றுக் கிடந்தது. அந்தப் பெண்கள் யாவரும் வெளியே எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கிடைப்பதற்கு அரிதான அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அருமையான அந்தப் பொருளைத் தன் வசமாக்கிக் கொண்டான் காளிமுத்து. கண் மூடித் திறப்பதற்குள் தன் வேலையை முடித்துவிட்ட அவன், யாருமே பார்க்கவில்லை என்று தெரிந்துகொண்ட திருப்தியுடன் இரண்டு மூன்று பெஞ்சுகள் தாண்டிப் போய் மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டான்.

'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள்' என்பார்கள். வதந்தியைக் கிளப்பிவிட்ட கெட்டிக்காரனது புளுகு எட்டு நிமிஷங்கூட நிலைக்கவில்லை; உண்மையில் எஞ்ஜினிலிருந்து ஏதோ ஒரு திருகாணி கழன்று விழுந்துவிட்டதால்தான் வண்டியை நிறுத்த வேண்டியதாயிற்று. நாலைந்து நிமிஷங்களில் அந்த வேலை முடிந்துவிடவே, மறுபடி புறப்பட ரெயில் 'கூ'வென்று

ஊதியது. இறங்கியிருந்த பிரயாணிகள் மளமளவென்று ஏறிக்கொள்ள, வண்டி மெதுவாக நகரத் தொடங்கியது.

ஜடை பில்லையைத் திருடிய காளிமுத்துவுக்கு இருப்பே கொள்ளவில்லை! பாவம், இதற்கு முன் ஒரு சிறு பொருளைக் கூடத் திருடிப் பழக்கமில்லாதவன் அவன். ஏதோ சந்தர்ப்ப வசத்தால் ஆலோசிக்காமல் 'திடுதிப்'பென்று செய்துவிட்டான். இப்போது அவன் பார்க்கிற பார்வையே அவனைக் காட்டிக் கொடுத்துவிடும்போல் இருந்தது. அந்தப் பெண்களிடமிருந்து எந்த நிமிஷமும் ஜடைபில்லை மறைந்த விஷயம் கிளம்பக்கூடும் அல்லவா? இப்படி நினைத்தபோது காளிமுத்துவின் உடம்பில் லேசாக நடுக்கம் ஏற்பட ஆரம்பித்தது. சுற்றியிருக்கும் அத்தனை பேர்களும் தன்னையே நோக்குவதாக ஒரு பிரமை ஏற்படவே, மெல்ல எழுந்து தட்டுத் தடுமாறி நடந்து, அருகிலிருந்த அறைக்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டான் காளிமுத்து.

அப்பாடா! இப்பொழுதுதான் அவனால் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது. இனி வெளியே, என்ன குழப்பம் நடந்தபோதிலும் அதைப்பற்றி அவனுக்குக் கவலை இல்லை. அவன் இறங்க வேண்டிய ஸ்டேஷன் வந்ததும் வெளியே வந்தால் போதுமே!

சுமார் பத்து நிமிஷம் சென்றிருக்கும். வண்டி ஏதோ ஒரு ஸ்டேஷனில் வந்து நின்றது, பிரயாணிகள் இறங்குவதும் ஏறுவதுமாகக் கொஞ்ச நேரம் அமளிப் பட்டது. பிளாட்பாரத்தின் ஒரு கோடியில் டிக்கட் இல்லாதவர்களை ஏற விடாமல் விரட்டியடிக்கும் டிக்கட் பரிசோதகரின் அதட்டல் குரல் கேட்டது. மற்றப்படி எவ்விதச் சந்தடியும் இல்லை.

எவ்வளவுதான் பத்திரமாக இருப்பதாக எண்ணிக்கொண்டாலும், காளிமுத்துவுக்கு முழுப் பயமும் நெஞ்சை விட்டு அகன்றுவிட்டதென்று சொல்ல முடியாது. ஜடைபில்லையைக் காணோம் என்பதை அறிந்தவுடனே வெளியே எத்தகைய குழப்பம் நிகழக்கூடும் என்பதைப் பற்றி ஊகிப்பதிலேயே அவன் சிந்தனை வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

ஸ்டேஷனில் மணி அடித்து ரெயிலும் புறப்பட்டதோ இல்லையோ, அந்தப் பெட்டியில் அதுவரை இல்லாதிருந்த சந்தடி கொஞ்சம் ஏற்பட்டது போல் தோன்றியது. அடுத்தாற்போல் 'டக்..டக்' என்று சத்தத்துடன் கனத்த பூட்ஸ் கால்கள் காளிமுத்து ஒளிந்திருந்த திசையை நோக்கி முன்னேறி வந்தன; பாவம்! அவனுக்கு இப்பொழுதே வயிற்றைக் கலக்க ஆரபித்துவிட்டது.

என்ன ஆச்சரியம்! மூடியிருந்த கதவைச் சமீபித்ததும் பூட்ஸ் கால்கள் இரண்டும் பட்டென்று நின்றுவிட்டன. அடுத்த கணம், ''யாரையா உள்ளே? கதவைத் திற, ஜல்தி!'' என்ற கர்ஜனையும் கேட்டது. காளிமுத்துவுக்குச் சப்த நாடியும் ஒடுங்கி, இருதயத் துடிப்பே நின்றுவிட்டது போலிருந்தது.

அவ்விதம் கதவைத் தட்டி நிற்பது போலீஸ்தான் என்று ஊகிக்க அவனுக்கு வெகு நேரமாகவில்லை. சற்று நேரத்தில் கையும் களவுமாகப் பிடிபடப் போகிறோமே என்று நடுநடுங்கிப் போனான் அவன். அப்போதுதான் இந்தப் பாழும் வேலையில் ஏன் ஈடுபட்டோம் என்று தன்னையே நொந்துகொண்டான்.

ஆனால் இனி அதைப்பற்றி யோசிப்பதில் என்ன பயன்? கதவு பலமாக இடிக்கப் பட்டது. இந்தத் தடவை, ''யாரடா உள்ளே? திறந்து வெளியே வருகிறாயா, இல்லையா?'' என்று உறுமியது ஓர் அதிகாரக் குரல்.

திறந்தவுடன் முதல் காரியமாகத் தன்னைச் சோதனை போடுவார்கள் என்பதும், ஜடைபில்லையைக் கைப்பற்றியவுடன் தனக்கு எப்பேர்ப்பட்ட 'மரியாதை' நடக்கும் என்பதும் அவனுக்குத் தெரியும்!

'என்ன செய்வது' என்று அறி

யாமல் திகைத்து நின்ற அவனுக்குப் பளிச்சென்று ஓர் அற்புதமான யோசனை உதித்தது. அவ்வளவுதான்; அடுத்த கணம் மடியிலிருந்த ஜடைபில்லையை அவசர அவசரமாக எடுத்து ஜன்னல் வழியாக வெளியே நழுவவிட்டான் காளிமுத்து.

ஹா! இனி அவனை யாருமே ஒன்றும் செய்ய முடியாதல்லவா? ஆகவே கதவைத் திறந்துகொண்டு தைரியமாக வெளியே வந்தான். ஆனால் அங்கே போலீசுக்குப் பதில் டிக்கட் பரிசோதகர் நின்றுகொண்டிருந்ததுதான் அவன் அடைந்த முதல் ஏமாற்றம்.

அவரும் வேறு யாரையோ எதிர்பார்த்தவர்போல் சூள் கொட்டிய வண்ணம், ''அட, அந்தப் பயல் இல்லையா? இந்த வண்டியில் ஏறியதைப் பார்த்தேனே! சே, சே! எங்கே டபாய்த்துவிட்டான் போக்கிரி!'' என்று கூறிக்கொண்டே திரும்பினார்.

யாரோ டிக்கட் இல்லாமல் ஏறியவனைப் பிடிக்க வந்திருப்பார் போலும், எதிர்பார்த்த பேர்வழியைக் காணாமல் ஏமாற்றம் அடைந்தவராய் அங்கிருந்து திரும்பியவர், ''சரி, உன் டிக்கட்டை



அம்மா: என்னடா சீனு, தலையிலே காயம்?

சீனு: எல்லாம் இந்தப் பரீட்சைதான் காரணம், அம்மா!

அம்மா: என்னது! பரீட்சையா..?

சீனு: பின்னே என்ன? பரீட்சையிலே வருகிற கேள்விகளுக்கெல்லாம் விடை கண்டுபிடிச்சு எழுதணும்னு மண்டையைப் போட்டு உடைச்சுக்கத்தானே வேண்டியிருக்கு!

—பி. கலாசாமி, காரப்பேட்டை.

எடு, பார்க்கலாம்'' என்று கேட்டார் எதேச்சையாக.

காளிமுத்து தன் மடியைத் துழாவியபோது பகீரென்றது அவனுக்கு. அவசரத்தில் ஜடைபில்லையுடன் டிக்கட்டையும் சேர்த்து வீசிவிட்டதை அப்பொழுதுதான் உணர்ந்தான். எப்படி இருக்கும் அவனுக்கு!

பேந்தப் பேந்த விழித்த காளிமுத்துவை டிக்கட் பரிசோதகர், 'என்னப்பா, சங்கதி? நீயும் 'மேற்படி மேற்படி' தானே? சரி சரி, வா இப்படி!'' என்று சொல்லிக் கழுத்தில் கையைக் கொடுத்துத் தள்ளிக் கொண்டு போனார்.

நடப்பது ஒன்றையும் லட்சியம் பண்ணாமல் ரெயில் அதன் பாட்டுக்கு ஓடிக்கொண்டிருந்தது.

போகிற போக்கில், அந்தப் பெண்கள் கூட்டம் இருந்த இடம் எப்பொழுதோ காலியாகி, மிகவும் அமைதியாக இருந்ததைக் கவனித்தான் காளிமுத்து. சற்றுமுன் நின்ற ஸ்டேஷனில்தான் அவர்கள் இறங்கிப் போயிருக்க வேண்டும்! பொருளைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் அவர்கள் போய்விட்டார்கள். அவன்தான் வீணாக மனத்தை அலட்டிக் கொண்டுவிட்டான், பாவம்! இதுதான் அவனுக்கு ஏற்பட்ட பெரிய ஏமாற்றம்!

இது இப்படியிருக்க, முந்திய ஸ்டேஷனில் இறங்கிச் சென்ற அந்தப் பெண்கள் எல்லோரும் வீட்டை அடைந்து வெகு நேரம் கழித்துத்தான் ஜடைபில்லையைக் காணோம் என்பதைக் கண்டார்கள். ரெயிலில் கோட்டைவிட்டு வந்த பொருளைப் பற்றி இத்தனை நேரத்திற்குப் பிறகு நினைத்து என்ன பிரயோஜனம் என்று சும்மா இருந்துவிட்டார்கள். திரும்ப ஸ்டேஷனுக்குப் போகவேண்டும் என்றாலும் ஒரு மைல் தூரம் நடக்க வேண்டுமே!

அந்தி மயங்கும் வேளையில், புஞ்சையில் உழவு வேலையை மேற்பார்வையிடப் போயிருந்த அந்த வீட்டுப் பண்ணையாள் பாடலிங்கம் திரும்பிவந்தான். ஜடைபில்லை தொலைந்துபோன சமாசாரத்தைக் கேள்விப்பட்ட அவன், உடனே மடியை அவிழ்த்து மேற்படி பொருளை எடுத்துக் கொடுத்தான்.

''புஞ்சையிலிருந்து வருகிற வழியிலே தண்டவாளத்தைத் தாண்டி வரும்போது, லயன் ஓரமாகக் கிடந்ததுங்க. ஏதோ நல்ல காலம் என் கண்ணிலே பட்டது. எடுத்து வந்தேன்'' என்று சொன்னான் அவன்.

எல்லோரும் மூக்கின்மேல் விரலை வைத்து ஆச்சரியப்பட்டார்கள்.

அந்தப் பெண்களும் அது தவறி விழுந்திருக்கும் என்றுதான் நினைத்துக்கொண்டார்களே தவிர, ஒரு பேர்வழியால் திருடப்பட்டுத் திரும்பக் கிடைத்திருக்கிறது என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

கதை: ஆர்வி

புலிக் குட்டி

சித்திரம்: ஸாமி

அண்ணு! நம்முடைய நாக்கன இதைச் செய்தான்?
அரசரிடம் உள்ள பகையில் உன்னையும் மறந்து விட்டான் போலிருக்கிறது!
பல்லவி! நீ பூரண கர்ப்பிணி! இந்த நிலையில் இப்படி வருத்தப் படக் கூடாது!
இருந்தால் இதற்குள் கட்டாயம் அகப்பட்டிருக்க வேண்டும்! இல்லாததால் தான் அகப்படவில்லை!
குழந்தை இறந்திருக்கமாட்டான். கொல்ல வருபவன் தூக்கிக்கொண்டு போவானேன்?
எத்தனை வருஷம் ஆனாலும் குழந்தை கிடைக்கும் வரையில தேடுகிற முயற்சியைக் கைவிட வேண்டாம். ரகசியமாய் இருக்கட்டும்!
உத்தரவு, அரசே!

மாதங்கள் ஓடின......
ஊரில் என்னப்பா விசேஷம்! ஒரே கொண்டாட்டமாய் இருக்கிறதே!
தெரியாதா ஆதித்தன் அரசருக்கு ஒரு மகன் பிறந்திருக்கிறான்!
அப்படியா?
அடி-தாதி கடம்பாதேவி சொனாள் குழந்தை காணாமல் போன குழந்தைப் போல இருக்கிறானாம்!
கடம்பா! அவனும் இருந்தால் வயது ஐந்து ஆகும்; இல்லையா?
ஆமாம் தேவி!
வருஷங்கள் ஓடி மறைந்தன. ஆனால் சீட்புலியும் புலிக்குட்டியும் காட்டிலிருந்த மலைக் கோட்டையிலே ஒரு புதிய மாறுதலையே உண்டாக்கி விட்டார்கள். சோழர்கள், சோழ அரசன், சோழ சாம்ராஜ்யம் இந்த மூன்றிலும் மாறாத வெறுப்பு ஏற்படும்படி சீட்புலி புலிக்குட்டிக்குப் பாடம் சொல்லி வந்தான்.

(தொடரும்.)

புத்த தேவன் உதித்தான்!

என். எஸ். சிதம்பரம்

1. புத்த தேவன் உதித்தான்!—எங்கும்
   புனித நெறியைப் பதித்தான்!
   சித்தம் மகிழ்ந்து பாடும்!—அவன்தன்
   சிறப்பைப் புவிகொண் டாடும்!

2. சாவும் நோயும் அறிந்தான்!—வாழ்வில்
   சாரும் மூப்பும் தெரிந்தான்!
   மேவும் பசியும் உணர்ந்தான்!—புத்தன்
   மேன்மை ஞானம் கொணர்ந்தான்!

3. மன்னர் வாழ்வைத் துறந்தான்!—புத்தன்
   மனைவி மகனை மறந்தான்!
   இன்னல் போக்கச் சென்றான்!—தவமும்
   இனிதாய்ப் புரிந்து நின்றான்!

4. சுடரும் கண்டு மகிழ்ந்தான்!—புத்தன்
   சுரக்கும் அருளாய்த் திகழ்ந்தான்!
   இடரும் நீங்க வழியே—தெளிந்தே
   இசைத்தான் தூய மொழியே!

5. கருணை உருவாய் விளைந்தான்!—புத்தன்
   கலக்கத் துயரைக் களைந்தான்!
   அருமை அன்பு கொண்டான்!—நல்ல
   அகிம்சை வழியைக் கண்டான்!

6. அன்பைப் புரிய உரைத்தான்!—பாச
   ஆசை நீக்க உரைத்தான்!
   இன்ப இரக்கம் நிறைந்தான்!—புத்தன்
   இனிய உயிராய்ச் சிறந்தான்!

7. சிறந்தே நாமும் வாழ்வோம்!—புத்தன்
   செப்பும் வழியில் வாழ்வோம்!
   நிறைந்த அன்பால் வாழ்வோம்!—தீமை
   நினையாப் பண்பால் வாழ்வோம்!

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
2/1801
சென்னை-600 00

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4,
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

புத்தர் பெருமான்

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள்—

அன்று மக்கள் அனைவரும் எழுந்திருக்கும்போதே ஒரு தனித் தெம்புடன் காணப்பட்டார்கள். இனம் தெரியாத ஒரு குதூகலம் உள்ளத்திலே தோன்றி முகத்திலே, ஒளி வீசுவதை ஒருவருக்கொருவர் கண்டனர். மனித இனத்தாரிடம் மட்டும் அல்ல; பறவைகள் முதல் கால் நடைகள் வரை எல்லா ஜீவராசிகளும் ஒரு புத்துணர்ச்சியுடன் விளங்கின. அடிவானத்தில் கதிரவன் தோன்றினான். அவன் பொற்கிரணங்களிலே ஒரு தனிப் பொலிவு இருந்தது. புற்பூண்டுகள் முதல் வானளாவும் மரங்கள் வரையில் எல்லாத் தாவரங்களிடத்தேயும் பசுமை பாய்ந்த தண்ணொளியுடன் புதிய மணமும் கமழத் தொடங்கின.

அன்று கபிலவாஸ்து நகரத்தில் சுத்தோதன மகாராஜாவின் அரண்மனை என்றும் கண்டிராத அளவுக்குக் கம்பீரமாகக் காட்சி அளித்தது. அதன் தோற்றத்திலே ஒரு புதுமை ததும்பி நின்றது. அதன்மீது தவழ்ந்து வந்த தென்றல் மங்கள வாத்தியங்களின் முழக்கத்தை நான்கு திக்கிலும் பரப்பிக்கொண்டிருந்தது.

ஆம்; இத்தனைக்கும் காரணம் அம் முதுபெரும் மன்னனுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்ததுதான். ஆண் குழந்தை என்றால் சாதாரணமாக மன்னனுக்குப் பிறந்த குழந்தையாக இருக்கவில்லை. பிறக்கும்போதே அந்தக் குழந்தையின் முகத்தை, இருளை விரட்டி உலகுக்குப் புத்தொளியைக் கொடுக்கும் சந்திரனாகவே கண்டார்கள் அங்கே ஆசி கூற வந்த பெரியார்கள். 'உலகம் போற்றும் உத்தமனாக விளங்குவான்' என்று ஐயமின்றிக் கூறினார்கள். அந்த நாளும் மிகவும் பிரகாசமான நாளாக இருந்ததுதான் ஆச்சரியம். வைகாசித் திங்கள் பூரண நிலவைக் கொடுக்கும் பௌர்ணமி தினம்தான் அது. அந்தக் குழந்தைதான் வயதானபின் அரச பதவியை வெறுத்து, போதி விருக்ஷத்தின் அடியில் அமர்ந்து, ஞான ஒளியைப் பெற்று, உலகுக்கும் அதை உபதேசித்து அருளிய புத்தர் பெருமானாக விளங்கிற்று. புத்தர் ஞானத்தைப் பெற்றதும் பௌர்ணமி அன்றுதான். அவர் இவ்வுடலை நீத்துப் புகழ் உடல் அடைந்ததும் பௌர்ணமி அன்றுதான். ஒவ்வோர் ஆண்டும் வைகாசித் திங்கள் பௌர்ணமி அன்று அவருடைய பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்கள். இம்மாதம் 24-ஆம் தேதி 2500-ஆவது புத்தஜயந்தி தினம் வருகிறது என்பதை உங்களுக்கும் நினைவூட்டுகிறேன்.

(Regd. as a News Paper in Ceylon) Reg. No. M. 59

கண்ணன் சித்திரப் போட்டி

கண்ணன் பத்திரிகையில் உங்களுக்காகப் புதிய சித்திரப் போ ஒன்றை வெளியிடுகிறோம். கதை, கட்டுரைப் போட்டிகளில் கல கொண்ட உங்களுக்கு இந்தப் போட்டி மிகவும் மகிழ்ச்சி தரும் என நம்புகிறோம்.

இந்தப் போட்டியில்—

- ★ ஐந்து வயது முதல் பதினாறு வயதுவரையுள்ளவர்கள்தான் கலந்துகொள்ளலாம்.
- ★ படங்கள் அனுப்புபவர்கள் கண்ணன் கழகக் கூப்பனைப் பூர்த்திசெய்து படங்களுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
- ★ படங்கள் டிராயிங் பேப்பரில் ஒரே பக்கத்தில் வரையப்பட்டிருக்கவேண்டும்.
- ★ படங்களுக்கு உங்களுக்குப் பிடித்தமான, பொருத்தமான தலைப்பை நீங்களே கொடுக்கவேண்டும்.
- ★ வர்ணப் படங்கள் அனுப்புபவர்கள் வாட்டர் கலர் பெயிண்டைத்தான் கொடுக்கலாம். வேறு வகை வர்ணங்கள் உபயோகப்படுத்தலாகாது.
- ★ ஒருவர் மூன்று படங்கள் வரையில் அனுப்பலாம்.
- ★ ஜூன் மாதம் 15-ஆம் தேதிக்குள் படங்களை எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

இவ்வளவுதான் நிபந்தனைகள். பரிசுக்குரிய படங்களை, கலைமகள் கண்ணன் ஓவியக் குழுவினர் பரிசீலனை செய்வார்கள். இந்தப் போ சம்பந்தப்பட்ட மட்டில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. படங்களு பின்புறத்திலோ அடியிலோ உங்கள் வயசு, பெற்றோர், விலாசம் மூ வற்றைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். தேர்ந்தெடுக்கப் பட படங்களைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலை வை திருக்கவேண்டும்.

மொத்தம் வயதுவாரியாக ஆறு பரிசுகள் உண்டு. மற்ற பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம். அதற்கும் உரிய சம்மா உண்டு.

கண்ணன் சித்திரப்போட்டி முடிவு ஜூலை முதல் தேதிய இதழில் வெளியாகும்.

கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4